# காஞ்சி

ஆசிரியர்
அண்ணாதுரை

20-3-66

20
காசு




1-9-63ல்
'ஆனந்தவிகடன்' வெளியிட்ட
கேலிச்சித்திரம்.

# கேள்வி--பதில்!

(1) இந்தியாவுக்குச் சொந்தமான கோகினூர் வைரம் பிரிட்டனிடம் இருக்கிறதாமே, அதனைத் திருப்பிப் பெற்றுக்கொள்ள முடியாதா?

முயற்சிகள் நடந்தபடி இருக்கின்றன; முடியவில்லை. சுயராஜ்யம் பெற்றபொழுது இது வற்புறுத்தப்படுவதற்கு இல்லை. கலைப் பொருள் என்ற வகையில் இந்த வைரம் கருதப்படுகிறது. ஆகவே இதனை சமரசம் பேசியோ அல்லது விலை கொடுத்து வாங்கியோ தான் இந்தியாவுக்கு மீண்டும் சொந்தமாக்கிக் கொள்ள முடியும். கோகினூர் வைரத்தின் இப்போதைய எடை 100 காரட். கோகினூர் வைரம் ஷாஜஹானிடம் இருந்தபோது அதன் எடை 800 காரட், அவுரங்கசீப் மன்னனிடம் வந்து சேர்ந்தபோது எடை 300 காரட்டாம்! இடையில் 'பலவெட்டு'கள் நடந்துவிட்டிருக்கின்றனபோலும். கிருஷ்ணா மாவட்டத்தில் இது 17ம் நூற்றாண்டில் கிடைத்திருக்கிறது. 1739 ல் நாதிர்ஷா இதனைக் கைப்பற்றினான். நாதிர்ஷாதான் இதற்குக் கோகினூர் என்று பெயரிட்டானாம். கோகினூர் என்றால் ஒளிமலை என்பது பொருள். நாதிர்ஷாவிடமிருந்து ஆப்கன் அமீர் கைக்குச் சென்று பிறகு ரன்ஜித் சிங்கிடம் சேர்ந்திருக்கிறது இந்த வைரம். ரன்ஜித்சிங்கிடமிருந்து 1849-ல் பிரிட்டிஷார் இதைக் கைப்பற்றி எடுத்துச் சென்றனர்.

(2) பண்டிதர் ஜவஹர்லால் நேருவுக்குச்சிலை அமைப்பதைப் பிரதம மந்திரி இந்திரா காந்தி அவர்கள் விரும்பவில்லையாமே உண்மையா?

ஆமாம். அப்படி ஒரு கருத்தைப் பிரதமமந்திரி வெளியிட்டிருக்கிறார்கள். மறைந்தவர் பெயரால் பயன்தரத்தக்க ஒரு அமைப்புத் துவக்குவது நல்லது என்ற கருத்து. ஆனால் ஆர்வம் மிக்கவர்கள் அந்தக் கருத்தைக் கவனிப்பதாகத் தெரியவில்லை. இப்போது அவுரங்காபாத் நகரில் மார்ச் 25-ல், ஒன்பதரை அடி உயரமுள்ள நேரு உருவச் சிலையைத் திறக்கப் போகிறார்கள். இதன் செலவு 60,000 ரூபாய். இந்தச் சிலை பிரபல சினிமா நட்சத்திரம் மீனாகுமாரியின் நன்கொடையால் அமைக்கப்பட்டிருக்கிறது.

(3) பொருளாதார நெருக்கடியான இந்த நேரத்தில் ஆடம்பரம், வீண் செலவு கூடாது என்று காங்கிரஸ் தலைவர்கள் கூறுகிறார்களே நியாயந்தானே?

மறுக்க முடியாத நியாயம். ஆனால் சொல்வேறு செயல் வேறாக இருக்கிறதே, அது தானே சங்கடம் தருகிறது. வீண் செலவு கூடாது என்று மக்களுக்கு உபதேசம், செய்யும் காங்கிரஸ் மகானுபாவர்கள் தங்கள் நடவடிக்கையில் அப்படிக் காட்டக் காணோம். சென்ற வாரம் மகாராஷ்டிர முதல் அமைச்சர் (காங்கிரஸ்) நேபாள மன்னரையும் மகாராணியையும் அழைத்து வந்து உபசாரம் நடத்தினார். எதற்காக வந்திருந்தார் நேபாள மகாராஜா? புலி வேட்டையாட! நியாயமா? தேவையா? இதை அறியும் பொதுமக்கள், வீண் செலவு கூடாது, ஆடம்பரம் கூடாது என்று காங்கிரஸ் தலைவர்கள் செய்திடும் 'உபதேசத்தை' மதிப்பார்களா?

(4) சர்க்காரின் ரசாயன உர திட்டத்தில் பலன் கிடைத்திருக்கிறதா?

விவசாயிக்குக் கிடைத்த பலன் தெரியவில்லை. உரம் விற்ற வகையில் சர்க்காருக்கு இதுவரையில் **43 கோடி** ரூபாய் இலாபம் கிடைத்திருக்கிறது. உரம் விற்பதில் இலாப நோக்கம் இருக்கக் கூடாது, உதவி செய்யும் நோக்கமும் உற்பத்தியைப் பெருக்கும் நோக்கமும் இருக்க வேண்டும் என்று இதே காங்கிரஸ் சர்க்கார் தான் அறிக்கை விடுத்தது. இதே சர்க்கார்தான் விவசாயி எக்கேடோ கெட்டுப் போகட்டும் என்று கருதி 43 கோடி ரூபாய் இலாபம் சம்பாதித்திருக்கிறது, உரம் விற்ற வகையில்.

(5) ஊழல், ஊதாரிச் செலவு என்று சதா காங்கிரஸ் சர்க்காரின் நிர்வாகச் செலவுபற்றிக் குற்றம் கண்டுபிடித்தபடி இருக்கிறீர்களே, இப்படித்தான் மற்ற நாடுகளில் குறைகூறும் குப்பன்கள் இருக்கிறார்களா?

ஐயாவுக்கு ஆத்திரம் போல இருக்கிறது, குறைகளைக் கிளறிக் காட்டுவதால். குறை கூறுபவர்களைக் குப்பன் என்று கேலி செய்தால், சும்மா இருப்பவர்களை சும்மா இருக்கும் சுப்பன்! என்று வெகு எளிதாகக் கேலிசெய்து விடலாம். போகட்டும். பொது நிர்வாகத்தில் உள்ள குறைகளைக் கண்டுபிடித்துக் கண்டிப்பது ஜனநாயகக் கடமைகளிலே ஒன்று. இங்கிலாந்தில் ஒரு அமைச்சர் அதிக விலை உயர்ந்த ஆடை அணிந்து கொண்டிருந்தார்–சில வருஷங்களுக்கு முன்பு தான். உமக்குக் கிடைக்கிற சம்பளத்தைக் கொண்டு இவ்வளவு ஆடம்பரமான உடை வாங்க முடியாதே? ஏது இந்த உடை? என்ற கேள்வியைக் கிளப்பித் திணற அடித்தார்கள். பிரிட்டனில் சர்க்கார் செய்யும் செலவுகளைக் கண்ணை மூடிக்கொண்டு ஒப்புக்கொண்டு விடுவதில்லை, கணக்கு ஆய்வுக் குழுவும் எதிர்க் கட்சியும். மலாயாவைப் பிரிட்டன் தன் பிடியில் வைத்துக் கொண்டு இருந்தபோது, கம்யூனிஸ்டுகளை ஒடுக்குவதாகக் கூறிக்கொண்டு ஏராளமான செலவு செய்தது பிரிட்டிஷ் சர்க்கார். எதிர்க் கட்சியினர் விடவில்லை. குறைகூறும் குப்பனாகி விட்டார்கள். ஆராய்ந்து பார்த்த போதுதான் அக்ரமம் அம்பலமாயிற்று. கம்யூனிஸ்டு ஒழிப்புக்காக ஆன செலவிலே ஒரு பகுதி 110,000 பவுண்டு! இது எதற்கு என்று கண்டுபிடிக்கப்பட்டது? எதற்காக ஆனசெலவு? வேட்டை நாய்களுக்காக! 102 வேட்டை நாய்களுக்காக 110,000 பவுண்டு செலவிட்டிருக்கிறார்கள். ஒரு வருஷத்திற்கு ஒரு நாய்க்கு 14000 - ரூபாய் செலவு! இந்தக் கணக்கு வெளிவந்தபோது, பிரிட்டிஷ் பொது மக்கள் எதிர்க் கட்சியினரைப் பாராட்டினார்கள்; குறை கூறும் குப்பன் என்று கேலி பேசவில்லை. அது ஜனநாயகம்! இங்கே சும்மா கிடக்கும் சுப்பனும், பங்கு கேட்கும் பக்கிரியும் நிரம்ப!!

காஞ்சி

மலர் 2 20—3—66 இதழ் 34

# இரண்டு காமராஜர்கள்!

என்ன இருந்தாலும் நம்மிடம் காமராஜருக்கு ஒரு தனிப்பற்று! சந்தேகப்படுகிறீர்களா? ஆதாரமற்ற பேச்சு என்கிறீர்களா? அவ்விதமெல்லாம் அந்தப் பெரியவரைப்பற்றிச் சந்தேகப்படக்கூடாது; நம்மிடம் தனியான, தணியாத, குன்றாத, குறையாத, மங்காத, மடியாத, உயர்வான ஒரு பற்று இருக்கிறது. எப்படித் தெரியும் என்று கேட்கிறீர்களா? நம்மிடம் தமக்கு உள்ள 'பற்று' பற்றி காமராஜரே எடுத்துக்காட்டி இருக்கிறார்! பேசி இருக்கிறார்!

பேசினாரா? அவரா? அவர் எப்போதும் நம்மை ஏசுபவராயிற்றே என்று கூறுவீர்கள்; தெரிகிறது. தவறு, எல்லோரும் பேசுவதுபோல அவர் பேச்சும் இருக்கும் என்று எண்ணிக்கொண்டு, அவருடைய பேச்சைக் கவனிக்கும்போது—அந்தப் பேச்சு ஏசுவது போலத் தெரிகிறது.

அவர் ஏசவில்லை! அவர் பேச்சின் பாணியே அப்படி!!

போகட்டும், காமராஜர், நம்மிடம் தனியான பற்று காட்டுகிறார் என்கிறீரே — என்ன ஆதாரம் அதற்கு? என்று கேளுங்கள்; கூறுகின்றோம்.

நம்மீது ஒரு சிறு தூசு விழுந்தால் போதும், காமராஜர் தமது கண்ணிலே மிளகாய்ப் பொடி தூவப்பட்டால் எப்படி துடிதுடிப்பாரோ, படபடத்திடுவாரோ அப்படி ஆகிவிடுகிறார்!

கழகத்தார்மீது, கேலி, ஏசுதல், கண்டனம், எவர் வீசினாலும், காமராஜர் கடுங்கோபம் கொள்கிறார்; ஆத்திரம் அடைகிறார்! ஆர்ப்பரிக்கவே செய்கிறார்.

எவ்வளவு திமிர் இருந்தால் கழகத் தோழர்களை இவ்வளவு கேவலமாகப் பேசத்தோன்றும் என்று கேட்கிறார்; கெம்பீரமாக! சகோதர பாசத்துடன்!!

அதுமட்டுமல்ல! நமக்கே எடுத்துக் கூறுகிறார், இன்னார் இன்னவிதமாக இழிமொழி பேசினாரே, ஏ! என் சோதரா! உன் இரத்தம் கொதிக்கவில்லையா! நரம்புகள் புடைக்கவில்லையா! இதயம் துடிக்கவில்லையா! கண்கள் கனல் கக்கவில்லையா!! எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வருகிறதே! எப்படி நீ அந்த இழிமொழியைத் தாங்கிக்கொண்டிருக்கிறாய்? ஏன் தாங்கிக்கொள்கிறாய்? என்று கேட்கிறார்.

இந்தஅளவு அன்பும் அக்கறையும், காமராஜருக்கு இருக்கிறது! நம்மை யாரேனும் இழிவாகப் பேசுவதை நாம் கேட்டுக் கொதித்து எழாவிட்டாலும், அவர் கொதித்து எழுகிறார், நமக்கு 'ரோஷம்' ஊட்டுகிறார்; அவ்வளவு 'பற்று' நம்மிடம்.

நம்பமுடியவில்லையே! கூட்டந் தவறாமல் கழகத்தைக் கேவலமாகப் பேசுபவர், 'அவன், இவன்' என்று அநாகரிகமாகப் பேசுபவர், பைத்தியக்காரர்கள் என்று தூற்றுபவர், அப்படிப்பட்ட காமராஜரா, நம்மை யாரோ இழிவாகப்பேசுவது கேட்டதும் பரிந்துவருகிறார், வரிந்து கட்டுகிறார் என்று கேட்கிறீர்கள். எப்போது; எங்கே, காமராஜர் நம்மிடம் 'பற்று' காட்டி, பாசம் காட்டிப் பேசினார் என்று கேட்கிறீர்கள்.

சென்றவாரம் நடைபெற்றது அந்த அதிஅற்புதம்! ஆமாம்! கழகத்தாருக்காக கச்சையை வரிந்துகட்டிக் காட்டியிருக்கிறார் காமராஜர். கழகத் தோழர்களுக்கு 'ரோஷம்' ஊட்டிட முனைந்திருக்கிறார்—தமது பேச்சால்.

நம்மை — கழகத்தாரை — 'குரங்குகள்' என்று ஒருவர் பேசினார் என்பதை எடுத்துகாட்டி, இப்படியா கேவலமாக, இழிவாகக் கழகத்தார்களைப் பேசுவது! எவ்வளவு திமிர்! இப்படிப் பேசியது கேட்டு, இந்த கழகத்துக்காரர்கள் ஆத்திரப்படாமல் இருக்கிறார்களே; இருக்கலாமா!? என்று காமராஜர் தமது தஞ்சை — திருச்சிச் சுற்றுப்பயணப் பேச்சிலே கேட்டிருக்கிறார்.

நமக்காக யார் இருக்கிறார்கள்? நம்மிடம் பரிவு காட்ட எவர் இருக்கிறார்கள் என்றெல்லாம் கவலைப் பட்டுக்கொள்வோமே, அந்தக் குறையே தீர்ந்துவிட்டது!! இதோ இருக்கிறார் காமராஜர்! நம்மை எவரேனும் ஒருவார்த்தை இழிவாகப் பேசினால் போதும், தோள் தட்டி, துடைதட்டி, ஜல்லடம் கட்டி, கதை சுழற்றிக் கிளம்புவார்! கழகத்தாரையா கேவலமாகப் பேசுகிறாய்; விடுவேனா உன்னை! என்று அறைகூவலை விடுப்பார்; நம்மையும் அழைத்து, கேட்டீர்களா, உங்களைக் கேவலமாக இன்னார் பேசி இருக்கிறார்? விடாதே! பிடி! ஒரு வார்த்தை உன்னைக் கேவலமாகப் பேசினால்; ஒன்பது கேவலத்தை வீசு! விடாதே! நடக்கட்டும் 'சம்வாதம்' என்று கருதிப் பேசுகிறார்.

அவருடைய பேச்சின்படி — அவர் 'ரோஷம்' ஊட்டுகிறாரே அதன்படி பார்த்தால், நம்மை யாரேனும் 'குரங்கு' என்று கூறினால், நாம்உடனே, "கோட்டானே! கொடும்பாவி! ஆந்தையே! அழுமூஞ்சி! கர்த்தபமே! கபோதியே! என்று மளமளவென்று எடுத்து வீச வேண்டும் இழிமொழிகளை; கேவலச் சொற்களை.

அப்போதுதான் அவருடைய மனதிலே ஒரு சாந்தி —ஒரு சந்தோஷம் உண்டாகும். பரவாயில்லை, நமது கழகத்தார்கள் கெட்டிக்காரர்கள் என்று தட்டிக் கொடுப்பார்!

அவ்வளவு 'பற்று' நம்மிடம் காமராஜருக்கு! நம் மீது ஒரு பழுப்பு இலை விழுந்தால்போதும், அந்த மரத்தின் அடியைப்பிடித்து உலுக்கு உலுக்கு என்று உலுக்கிக் கீழே சாய்த்திடுவார்!

எப்போது, யார், நம்மைக் 'குரங்குகள்' என்று ஏசினார்கள்? சுதந்திரக் கட்சித் தலைவர் ராஜகோபாலாச்சாரியார், நம்மைக் 'குரங்குகள்' என்று ஏசினார்— என்கிறார் காமராஜர்.

ஆச்சாரியாரா? அவருடைய கட்சியும் கழகமும் காங்கிரஸ் எதேச்சாதிகாரத்தை வீழ்த்த ஒன்றுபட்டு இருக்கிறதே, அவர் ஆயிரம் இடத்தில் கழகத்தைப் பாராட்டி இருக்கிறாரே, கழகத் தோழர்களைப் புகழ்ந்து பேசி இருக்கிறாரே, கழகம்தான் நாட்டை ஆளவேண்டும் என்று கூறியிருக்கிறாரே, தமிழகத்தில் அடுத்த 'அமைச்சரவை' தி. மு. கழகத்துடையது; இதிலே துளியும் ஐயம் இல்லை என்று பேசியிருக்கிறாரே, அவரா, கழகத்தார்களை 'குரங்குகள்' என்று ஏசியிருப்பார் என்று கேட்பர். நியாயமான கேள்வி.

சுதந்திரக் கட்சித் தலைவர் ஆச்சாரியார், இராமாயணத்தைப் போற்றுபவர், ராமகாதை புண்ணிய காதை என்று பாராட்டுபவர். அந்த இதிகாசத்தைத் தமது சொற்பொழிவுகளில், கட்டுரைகளில் பயன் படுத்துபவர். அந்த முறையில், 'அரக்கர்களை' அழித்திட வானரசேனை கிளம்பியதுபோல காங்கிரஸ் எதேச்

சாதிகாரத்தை ஒழித்துக்கட்ட கழகத்தார் கிளம்பி இருக்கிறார்கள் என்று பேசியிருக்கிறார்.

இதைத்தான் காமராஜர் கழகத்தார்களை ஆச்சாரியார் 'குரங்குகள்' என்று ஏசினாரே, என் உடம்பெல்லாம் படபடவென ஆடுகிறதே, உள்ளம் எரிகிறதே, என்றெல்லாம் கூறுகிறார்.

இராமாயணத்தைப்பற்றி ஆச்சாரியார் போன்றவர்கள் கொண்டுள்ள கருத்தை மறுத்திடும் சுயமரியாதை இயக்கத்தவரும் பண்பாட்டுத்துறை ஆராய்ச்சியாளர்களும், வானரசேனை என்ற சொல், உண்மையில் தென்னகத்தில் ஒரு பகுதியினரை 'குரங்குகள்' என்று கேவலப்படுத்துவதற்காகப் பயன்படுத்திய ஏசல் மொழியாகும் எனக்கொண்டுள்ளனர்.

இதிகாசத்தை நம்பிடும் ஆச்சாரியார் போன்றவர்கள் அரக்கராட்சியை ஒழித்திட தேவர்கள் பூலோகத்தில் வானரர்களாக 'அவதரித்தனர்' என்று தத்துவம் பேசுகிறார்கள்.

இந்தத் தத்துவத்தையோ, இதிகாச நம்பிக்கையையோ காமராஜர் மறுக்கிறாரா? இராமாயணம், ஆரியத் திராவிடப் போராட்டக் காதைதான், இராவணன் அரக்கன் அல்ல, வானரர், தென்னகத்தினரின் ஒரு பகுதியினர்தான் என்று கருதுகிறாரா? கருதினால், அதனை வெளிப்படையாக ஒப்புக்கொண்டு பேசிட முன்வருகிறாரா? அந்தத் துணிவு உண்டா? காட்டுவாரா? என்று கேட்கத் தோன்றுகிறது.

ஆனால் உண்மை என்னவென்றால், எந்தக் காமராஜர், வானரர் என்றால் குரங்குகள் என்று பேசி, நம்மை ரோஷமூட்டிவிடக் கிளம்புகிறாரோ, அவரைத் தலைவராகக்கொண்ட சத்சங்கத்தின் ஆதரவில்தான் சென்னையில் தொடர்ந்து 'இராமாயண காலட்சேபம்' நடத்தப்பட்டு வருகிறது. கிருபானந்தவாரியாரின் ராமாயண காலட்சேபத்துக்குக் காமராஜர் பேராதரவு தருகிறார்; புளகாங்கிதம் அடைகிறார்.

இப்படி ஒருபுறம் இராமாயணப் பிரசாரத்தை ஆதரிக்கிறார்; இப்போது வானரசேனை என்ற சொல், கேவலமானது, இழிவானது, உங்களை ஆச்சாரியார் வானரர் என்று ஏசியிருக்கிறாரே, ரோஷம் இல்லையா, கோபமில்லையா என்று பேசுகிறார்.

இந்த இரண்டு காமராஜர்களில், எந்தக் காமராஜர் உண்மையான காமராஜர்?

கிருபானந்தவாரியாரின் இராமாயணத்திலே இலயிக்கும் 'பக்த' காமராஜரா? அல்லது இராமாயண ஆராய்ச்சி நடத்தும் பகுத்தறிவுக் காமராஜரா? எந்தக் காமராஜர் உண்மையான காமராஜர்?

முன்பு 'பக்த' காமராஜராக இருந்தார், இப்போது 'பகுத்தறிவு'க் காமராஜராக மாறிவிட்டார்என்று கூறப்படுமானால், மெத்த மகிழ்ச்சி; அந்தத் துணிவுடன் அவர் முன்வருவதானால், இனி ஊரூருக்கும் இராமாயண காலட்சேபம் நடத்தப்படுவதை ஊக்குவிக்காமல், பெரியாருடன் இணைந்து, இராமாயண விளக்கச் சொற்பொழிவுகள் நடத்திட முன்வரவேண்டும். வருவாரா? வருவதாக இருந்தால், ஆச்சாரியார் அல்ல வேறு யாரும், நம்மை மட்டுமல்ல, வேறு எவரையும் வானரர் என்று கூறிடின், காமராஜருடன் கூடி நமது கழகம் கண்டனம் தெரிவிக்கத் தயார்! தயார்! காமராஜர் இந்த அறைகூவலை ஏற்றுக்கொள்வாரா? அந்தத் துணிவு பிறக்குமா அவருக்கு — பச்சைத் தமிழருக்கு — பகுத்தறிவுத் தமிழருக்கு!!

கிருபானந்தவாரியைவிட்டு இராமாயண காலட்சேபம் நடத்தச் சொல்வது, அதற்கு 'தர்மகர்த்தா' வேலை பார்ப்பது; அதன் மூலம் பக்தர்களின் ஓட்டுகளைப் பறிப்பது; வேறோர் சமயம் 'பகுத்தறிவு' பேசுவது, வானரர் என்றால் குரங்கு என்று பொருள், உங்களை ஆச்சாரியார் வானரர் என்று கூறியிருக்கிறார்; ஆகவே அவரை நீங்கள் ஏசுங்கள் என்று மூட்டிவிடுவது, அதிலே ஏதாவது ஓட்டுகள் கிடைக்காதா என்று மோப்பம் பிடிப்பது; இப்படியா ஒரு பெரிய தலைவர் மிக மட்டமான முறையிலே பேசுவது!

அறைகூவி அழைக்கத் தோன்றுகிறது காமராஜரை! ஐயா! காமராஜப் பெரியவரே! வாருங்கள்! உங்கள் தலைமையில் ஒரு மாபெருங் கூட்டம் நடத்திடுவோம்; அதிலே இராமாயணத்தைப்பற்றி இதிகாச நம்பிக்கையாளர் கொண்டுள்ள கருத்துக்களை மறுத்துப்பேசிடலாம்! சம்மதமா? வருகிறீரா? அந்தக் கூட்டத்திலே கண்டனத் தீர்மானம்கூடப் போடலாம், 'வானரசேனை' என்று கழகத்தார்களை ஆச்சாரியார் பேசியது தவறு, என்று. நீங்களே முன்மொழியலாம்! வருகின்றீரா?

ஆச்சாரியார் முன்பு முதலமைச்சராக இருந்தபோது, நம்மை மூட்டைப் பூச்சிகளை நசுக்குவதுபோல நசுக்கிவிடப்போவதாகப் பேசினார்; பக்கம் நின்று அவருக்குப் பல்லிளித்து இருந்துவந்தவர் இதே காமராஜர்.

இப்போது துடிக்கிறது இவர் உள்ளம்; நம்மை ஆச்சாரியார் ஏசுகிறாரே என்று பதறுகிறார்.

சிண்டு முடிந்துவிடுவது என்பது மிகமிகச் சாதாரணமானவர்கள் செய்திடும் மிகத் தரக்குறைவான தந்திரம். அவர்களேகூட இப்போது அதனை விட்டுவிட்டார்கள், வெட்கப்பட்டுக்கொண்டு; அது பலிக்கவில்லை என்பதால்.

முன்பு கூறுவார்கள் அங்காடிப்பக்கம் இரண்டு அடாவடிப் பேர்வழிகள் ஒருவருடன் மற்றொருவர் அமளி செய்வதுபோலப் பாவனைகாட்டிய நிலையில், அந்தப்பக்கம் வரும் ஒரு அப்பாவியைக் காட்டி ஒருவன் சொல்லுவானாம், "அதோ போகிறாரே பெரிய மனிதர்! அவர் காலிலே போய் வீழ்ந்து புத்திகேளடா பயலே! தருவார்" என்று; உடனே மற்றவன், "அவன் பெரிய மனிதனா! அவன் காலில்தான் விழவேண்டுமா? என் காலிலே அவனை விழச்சொல்லு, நான் தருகிறேன் புத்தி, அவனுக்கு; பொதிபொதியாக!" என்று.

அதுபோன்றது காமராஜர் கையாளும் தந்திரம்; ஊசிப்போன முறை. ஆச்சாரியார் உங்களைக் குரங்கு என்றார், நீங்கள் அவரை ஏசுங்கள் என்று தூண்டுவது; நாம் அவருடைய தந்திரம் தெரியாமல் ஆச்சாரியாரைக் கண்டித்ததால், உடனே வேறோர் கூட்டத்தில் ஆச்சாரியாருக்காக உருகுவதாக வேடமிட்டு, "அந்தப் பயல்கள் உம்மை இழிவாகப் பேசினார்களே, எனக்கு இதயமே இரண்டாகிவிடுவது போலிருக்கிறதே! சும்மா விடலாமா! எடும் பாணத்தை! விடும் அவர்கள் மீது!" என்று மூட்டுவது; பிறகு "அமளி! அமளி! இரு கட்சிகளுக்குள் அமளி! இப்படி அமளியிட்டுக்கொள்ளும் இந்தக் கட்சிகளா நாட்டுக்கு நல்லவழி காட்டத் தக்கவை" என்று மக்களிடம் 'கோள்' மூட்டுவது, என்ற இந்தமுறை பலிக்கும் என்று நினைக்கிறார். பாவம்.

அதனால்தான் நாம் காமராஜரை வெளிப்படையாகவே அழைக்கிறோம், உம்முடைய உண்மையான கருத்தைக் கூறிட வாரும் என்று.

கழகத்தவர்களை, இராமாயணத்தைப் புண்ய காதை என்றும், வானரர்களை தேவர்களின் 'அம்சம்' என்றும் நம்பும் ஒருவர், 'வானரசேனை' என்று கூறின

(15-ம் பக்கம் பார்க்க)

தம்பி

## வெள்ளை மாளிகையில்.......

# கருப்பு நட்சத்திரம்!

"நான் படித்த எல்லா இலக்கியங்களிலேயும் என் உள்ளத்தில் அதிக அளவு எழுச்சியூட்டியது மார்கஸ் கார்வியின் தத்துவம்பற்றிய இலக்கியமே"

என்று ஆர்வத்துடன் கூறினர் கனு நாட்டு அதிபராக இருந்து அகற்றப்பட்ட நிக்ருமா, 1958-ல். நீகரோக்களின் உரிமைககாகவும் நல்வாழ்வுக்காகவும் போராடியவர்களிலே மிகத தீவிரவாதி இந்த கார்வி. இவர்பற்றி பெருமதிப்புக் கொண்டவர் நிக்ருமா. அக்ராவில் 1958-ல நடைபெற்ற அகில ஆப்பரிக்க மக்கள் காங்கிரசில் பேசும்போது கார்வியைப் பெரிதும பாராட்டிப பேசியதுடன், கனுநாட்டுத் துரைத்தனம் அமைத்த வியாபாரக் கப்பல அணிககு, நிகருமா, "கருப்பு நட்சத்திர அணி" என்று பெயருமிட்டார். எந்த கார்வியிடம் நிகருமா அத்தனை மதிபபு வைத்திருந்தாரோ, அவர் பொறிபறக்கப் பேசினவர்-புதுப்புது திட்டம் தீட்டியவர்—துணிவுடன் போராடியவர்-ஆனல் நிர்வாகத்தைத் திறம்பட நடத்திச் செலலாமல் தோல்வி கண்டவர்.

பல ஆண்டுகள் கார்வியின் புகழ் நாடு பலவற்றினிலே பரவி நின்றது. கருப்பரின் கஷ்டமெல்லாம் இனித் தீர்ந்துபோகும், விடுதலையும் புது வாழ்வும் கிடைததுவிடும் என்று எணணற்ற நீக்ரோக்கள் நம்பினர். மார்கஸ் கார்வி, நீகரோககள் அமெரிககாவில் இருந்து கொணடு அல்லலையும் இழிவையும் தாங்கிககொணடிருபபானேன், அவர்களுக்கென று தாயகம இருக்கிறது, ஆப்பிரிக்கா! அங்கு சென்று உரிமையுடன் வாழநதிடலாம! எழுக! என்னுடன வருக! ஆபபிரிககா சென்றிடுவோம, அங்கு நமது அரசு கணடிடுவோம்! என்று அழைததார். எழுசசி ததும்பிற்று. மேற்கிந்தியப பகுதியில பிறந்த இநத கார்வி அமெரிகக நீகரோக்களின மாபெருந் தலைவரானர். ஆபபிரிககா சென்றிடுவது என்ற அவருடைய திட்டம, சொல்லளவுடன் இருந்துவிடவில்லை; ஏற்பாடுகளே மேற்கொளளப பட்டன; கபபல்கள தயாரிக்கப்பட்டன; பெருநிதி திரட்டப்பட்டது; பல இலட்சம நீக்ரோககள் புனிதப பயணததுக்குத தயாராயினர், மூன்று கப்பலகளே கிளமபின! அந்த கபபல் கம்பெனிககு கார்வி சூட்டிய பெயர்தான் 'கருப்பு நட்சத்திரம்' என்பது. அநத பெயரைத் தான் ஆட்சியில அமாந்தபோது நிக்ருமா கனு நாட்டுக கபபல அணிககுச சூட்டினர்.

எழுசசியூட்டும் திறனில் நிக்ருமாவும கார்வியும ஒன்று என்று கூறலாம். ஆனல் நடைமுறைககு ஒவ்வாத திட்டங்களைத தீட்டுவது, செயலிலே திறமை காட்டாதிருபபது, காரியததைக கெடுத்துவிடுவது, நமபிககையைக குலைததுவிடுவது என்ற குற்றச்சாட்டுகளை அன்று கார்வி மீது சுமததினர்; இன்று நிக்ருமா மீதும இந்த விதமான குற்றச்சாட்டு வீசப்பட்டிருககிறது.

கார்வி எழுச்சியூட்டும் பேச்சிலே மட்டுமல்ல, நடை உடை பாவனையிலும் வல்லவர். பல ஆணடுகள, கார்வியின அணிவகுபபு நடததிடும 'பவனி' நீகரோ மககளுக்குக் கண்கொளளாக் காட்சியாக இருந்தது.



நிக்ருமாவுக்கு எழுச்சியூட்டத்தக்க சிறப்புப் பட்டங்கள் பல உணடு; அதுபோலவே கார்விக்கும் தளபதிகளாக்கப்பட்டவர்களுக்கும் விதவிதமான பட்டங்கள்.

ஆப்பிரிக்க மாமன்னர்—மன்னர் — அமைச்சர்—தளபதி—என்றெல்லாம் பட்டங்கள். எல்லாம் அமெரிக்காவில் இருந்துகொண்டே! கார்வி ஆப்பிரிக்காவில் காலடி வைத்ததே இல்லை; ஆனல் பல ஆண்டுகள் அமெரிக்காவில் அவரைச் சுட்டிக்காட்டுவர் பெருமிதத்துடன், ஆப்பிரிக்க மாமன்னர்! என்று.

பட்டங்கள் மட்டுமல்ல, அவைகளுக்கேற்ற விதமான பகட்டுடைகள்! பவனிகள்! பராக்குகள்!

கார்வி தோற்ற பிறகு இவைபற்றிப் பலர் ஏளனம் செய்தனர்; ஆனல் அவர் புனிதப் பயணம் பற்றிய திட்டத்தை எடுத்துரைத்துக்கொண்டிருந்தபோது, ஏளனம் செய்தவர் எவரும் இல்லை. எங்கும் எழுச்சி மயம்!!

அப்போது நிக்ருமா, அமெரிக்காவில் மாணவர்!

அந்த இளம் உள்ளத்தில் பதிந்துவிட்ட எழுச்சி காரணமாகவே, நிக்ருமா ஆட்சிக்கு வந்தபோது, கார்வியே தனக்கு 'வழிகாட்டி'யாக விளங்கிவந்தார் என்று கூறிடச் செய்தது.

அடிமைப்பட்டு, இன்னலையும் இழிவையும் தாங்கித் தாங்கிக் குமுறிக் கிடக்கும் மக்களுக்கு, விடுதலை ஆர்வம் ஊட்ட, எழுச்சி உண்டாக, ஒரு நம்பிக்கை எழவேண்டும். அந்த நம்பிக்கையைத் தரத்தக்க ஒருமாவீரன் வேண்டும்.

கார்வி அந்த மாவீரனுக விளங்கினுன். ஆனல் எழுச்சியூட்டப் பயன்பட்ட அந்த மாபெருந் தலைவன் தானே எழுச்சி வயப்பட்டு, நடைமுறைக்கு ஏற்றதல்லாத திட்டம் தீட்டி, தோல்வி கண்டான்; சிறையிலேயே தள்ளப்பட்டான்; நாடு கடத்தப்பட்டான்.

நீக்ரோ இனத்தவரை அழைத்துச் சென்று மாபெரும் ஆப்பிரிக்கப் பேரரசு அமைககப் போவதாக அறிவித்து, அணிவகுப்பு நடத்திய கார்வி தன் கடைசி நாட்களை, இலண்டன் நகரில் கழிகக வேண்டியதாயிற்று; கனவு கலைக்கப்பட்ட நிலையில்; மனம் உடைந்த நிலையில்; கவனிப்பாரற்று! நட்சத்திரம் கருப்பாகி விட்டது!

இலட்சியங்களைக் கொண்டு எழுச்சி யூட்டுவதிலே வெற்றி கிட்டியான பிறகு, மக்களை அணி திரட்டியான பிறகு, செயலில் ஈடுபட்டு, இலட்சியத்தை நிறைவேற்றிட முனையும்போது ஏற்படும் ஏமாற்றம் தோல்வி, வரலாற்று ஏட்டினிலே பலப் பல காணக் கிடக்கின்றன. இலட்சியம் காண்பதில், அதனை மக்கள் ஏற்றுக் கொள்ளச் செய்வதில் வெற்றி கண்டவர்களிலேயே பலர், இலட்சியத்தை நடைமுறை வெற்றியாக்கிடும் முயற்சியில் தோல்வியால் தாக்குண்டு போயுள்ளனர். காலம் ஏற்றதாக அமையாததாலும், கருவிகள் செம்மையாகக் கிடைக்காததாலும். புதியசூழ்நிலைகள் எதிர்பாராத வகையிலே வடிவமெடுத்து விடுவதாலும், அத்தகைய தோல்விகள் ஏற்பட்டுவிடுகின்றன.

அந்தத் தோல்விகள் எல்லாமே இலட்சியம் சரியானதல்ல என்பதற்குச் சான்றுகள் என்று கொண்டு விடக் கூடாது.

தோல்வி தாக்கிடும் என்று அஞ்சி இலட்சியங்களை மேற்கொள்ளாதிருப்பதும் தவறு; நடைமுறைக்கு ஏற்றதோ அல்லவோ என்பது குறித்த கவலையற்று, காலமும் கருவியும் தக்கவிதமாக அமைகின்றனவா என்பதுபற்றிப் பொருட்படுத்தாமல், வெறும் இலட்சிய முழக்கம் எழுப்பியபடி இருந்து வருவதும் பயனற்ற வேலையாகிவிடும்.

குழலின் துளைகள் சரியானபடி அமைந்து விடுவதாலேயே' அதனைக் கொண்டு எவரும் இன்னிசை எழுப்பிடலாம் என்று எண்ணுவதும் தவறு; அதுபோலவே திறமைமிக்க இசைப் புலவன் நான்! எனவே குழலின் துளைகள் எப்படித் தாறுமாறுக இருப்பினும் இனிய இசையினை எழுப்பிட என்னுல் முடியும் என்று இறுமாந்து கூறுவதும் தவறு.

மக்கள் நம்முடன் வருவார்களா அவர்களால் முடியுமா கடினமான பயணம் மேற்கொள்ள என்று எண்ணி எண்ணித் தயங்கி பயணத்தைத் துவக்காமல் இருந்து விடுவதும் தவறு. மக்கள் தன்னுேடு வருகிருர்களா இல்லையா என்பது பற்றிய கவலையற்றுப் பயணத்தை மேற்கொண்டு விடுவதும் பயனற்றதாகி விடும்.

ஆர்வம் காரணமாக, எந்தத் திட்டமும் எளிதாக நிறைவேற்றிவிடக் கூடியது என்ற 'மனமயக்கம்' ஏற்பட்டு விடுவதுண்டு; ஆனல அந்த மயக்கம் பீடித்துக் கொண்ட நிலையிலே செய்துவிடும் செயல் வெற்றிக்கு வழி அமைபபதில்லை.

அச்சகத் தொழிலாளியாக வாழ்க்கையைத் துவக்கிய கார்வி ஆர்வம் கொந்தளிக்கும் உள்ளத்தினராகி,

ஜனதா ஆயுர்வேத வைத்தியசாலை
JAVS
உரிமையாளர்
M. அமீர்பாட்சா
மதராஸ் ஸ்டேட் சோல் ஏஜண்ட்
54, சோலைஹால்ரோடு. திண்டுக்கல்.

ஏஜன்சி இல்லாத ஊர்களுக்கு ஏஜன்சி தேவை!

எங்களிடம் கோல்டன் டானிக் [பேட்டன் டானிக்] தசமூலாரிஷ்டம், பிரசாதிக்கசுதா, பாலாமிருதம், சுதாமிருதம், கதலிக்கல்ப்பம், சேவனப்பிரகாசம், ரதிரமணன், ஆஸ்த்துமா, க்ஷயம், டி. பி. இவைகளுக்கு சிறந்த லேகியம்

'கருங்குரங்கு ரஸாயனம்'

மற்றும்

'மதுகாசவம்'

முதலிய ஆயுர்வேத மருந்துகளும் கிடைக்கும்.

ஏஜன்சிகளுக்கு நல்ல கமிஷன் கொடுக்கப்படும்.

கொடி, படை, முழக்கம் அமைத்துக்கொண்டு ஆப்பி ரிக்கப் பேரரசு அமைத்திடுவேன் என்று சூள் உரைத்துக் கிளம்பியபோது, வெற்றி நிச்சயம் என்றுதான் நம்பிக் கொண்டிருந்தார்.

பச்சை—கருப்பு—சிகப்பு—என்றவிதமான மூவர்ணக் கொடியினைப் பறக்கவிட்டார் கார்வி! கருப்பு, இனத்திற்குச் சின்னம்; சிகப்பு இரத்தம் சிந்தியேனும் வெற்றி காண்போம் என்பதனை உணர்த்த; பச்சை, வளமான வாழ்வு அமைந்திடும் என்பதற்கான அடையாளம்!

கிட்டத்தட்ட பத்து இலட்சம் டாலர்கள் திரட்டினார். புனிதப் பயணத்துக்காக. கப்பல்கள் கிளம்பின! வழியிலேயே இன்னல், இழப்பு! திரட்டிய பணத்தைக் கொண்டு செம்மையான அமைப்பை நடத்திட முடியவில்லை பணம் திரண்டதும், பசப்பித் திரிவோர், பல்லிளிப்போர், பறித்துத் தின்போர் மொய்த்துக் கொண்டனர். பணம் பாழாயிற்று. பொதுமக்களிடம் பணம் திரட்டி மோசம் செய்ததாக வழக்குத் தொடரப்பட்டு, கார்விக்கு ஐந்தாண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இரண்டாண்டுச் சிறை வாழ்க்கைக்குப் பிறகு, கார்வியை அமெரிக்க அரசு நாடு கடத்திவிட்டது. அவ்வளவோடு அவர் 'கதை' முடிந்தது.

கார்வியை, மாணவ நாட்களிலே கண்டு களித்து, எழுச்சி பெற்ற நிக்ருமாவும், தனது நாட்டை வாழ வைக்க வேண்டும் என்ற ஆர்வம் கொழுந்து விட்டெறியும் உள்ளத்தினர்; அதிலே ஐயமில்லை. ஆனால் நடைமுறைக்கு ஏற்றதா அல்லவா என்பதுபற்றி எண்ணிப் பார்த்திடாமல் திட்டம் பல மேற்கொண்டதுடன், எவருடைய கருத்தையும் மதிக்க மறுத்து, ஜனநாயகத்தைச் சிதைத்து ஒரு கட்சி சர்வாதிகாரத்தைத் திணித்தார்; எல்லாம் நாட்டின் நன்மைக்காகவே!! ஆனால் நாடு தாங்கிக்கொள்ள மறுத்துவிட்டது. எந்த நாட்டிலே அவரை 'வழிபட்டு' நிற்க மக்கள் துடித்துக் கிடந்தனரோ, அதே நாட்டிலே அவர் இனி 'படையுடன்' வந்து போரிட்டு வெற்றி பெற்றாலன்றி 'பவனி' வந்திட முடியாது என்ற நிலை.

ஜனநாயகம் சிதைக்கப்பட்டால் ஏற்படக்கூடிய கேட்டினைக் கனு நிகழ்ச்சி எடுத்துக் காட்டுகிறது; அதுபோன்றே ஜனநாயகத்தை போலியானதாக்கி, ஆட்சி செய்பவரை 'தலையாட்டி'யாக்கிட தருக்கர் சிலர் முனையக்கூடும்; அதிலும் நிறவெறி காரணமாக அந்தத் தருக்கு ஏற்பட்டிருப்பின் எத்தகைய அக்ரமத்தையும் துணிந்து செய்வார்கள் என்பதை எடுத்துக் காட்டுகிறார் இர்விங் வாலாஸ், தாம் எழுதிய கருத்தாழம் மிக்க மனிதன் என்ற ஏட்டின் மூலம்.

வெள்ளையருக்கு அஞ்சி அநீதிக்கு அடிபணியவும் மாட்டேன்; கருப்பர் என்ற இனப்பாசத்திற்காகவும் அநியாயத்துக்குத் துணை நிற்கவும் மாட்டேன் என்று டில்மன் பேச்சால் அல்ல, செயலால் காட்டியது கண்டு வெகுண்ட வெள்ளைப் பேரதிகாரிகள், அவர் மீது 'கண்டனம்' தொடுத்தனர்.

தகுதியற்றவர்
தருக்கர்
காமவெறி பிடித்தவர்
சதிகாரருக்குத் துணை நிற்பவர்

என்ற பல்வேறு வகையான குற்றங்களைச் சுமத்தினர்!

தம்பி! இனம், ஜாதி, குலம், செல்வம் என்பவை காரணமாக அமைக்கப்பட்டுவிடும் பேத உணர்ச்சி இருக்

## வருந்துகிறோம்

சென்னை மாநகரமன்ற கழக உறுப்பினர் **துலுக்காணம்** அவர்கள் 16—3—66 இரவு காலமான செய்தியறிந்து திடுக்கிட்டோம்.

திராவிடர்க் கழகக் காலந்தொட்டு. இந்நாள் வரையில் நம்மோடிணைந்து, பணியாற்றிய நல்ல தொண்டரை நாம் இழந்துவிட்டோம்.

அவரது பிரிவால் வருந்தும் மனைவி, மக்கட்கும், உற்றார் உறவினர்க்கும் கழகத் தோழர்கட்கும் நமது இதயங்கனிந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறோம்.

கிறதே, அதனால் ஆட்டிப்படைக்கப்படுபவர்கள், சொல்லிடவும் கூசும் கொடுமைகளைச் செய்திடவும் துணிவர், இனப்பெருமை காப்பற்றப்படவேண்டும் என்பதற்காக, கொலையும் துணிந்து செய்திடுவர்,

நான் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த நாட்களில்—ஜாதிப் பிடிப்பு இன்றுள்ளதைவிட பயங்கரமான அழுத்தத்துடன் இருந்தது; அந்த நாட்களில், ஜாதி வெறிபிடித்தவர்கள் எத்தகைய கொடுமையைச் செய்யத் துணிவர் என்பதனை எடுத்துக் காட்டும் ஒரு பயங்கரச் சம்பவம் நடைபெற்றதாகக் கேள்விப்பட்டு கிடுகிடுத்துப் போனேன்.

தன்னை சற்று மேல்ஜாதி என்று கூறிக் கொண்டு தமது மகளை மண முடித்துக் கொண்டவன் உள்ளபடி தம்மைவிடச் சிறிதளவு 'மட்டமான' ஜாதி என்று அறிந்துகொண்ட பெண் வீட்டார், என்ன செய்தனர் தெரியுமோ! தாலியை அறுத்துப்போடு! அந்தத் தகாதவனுடன் செய்து கொண்ட திருமணம், சாஸ்திர சம்மதம் பெற்ற திருமணம் அல்ல!!—என்று கூவிக் கொக்கரித்து 'மாப்பிள்ளை'யை விரட்டிவிட்டு, பெண்ணைத் தமது வீட்டோடு வைத்துக் கொண்டார்கள் என்று எண்ணிக்கொள்ளுவாய். அவ்விதம் செய்யவில்லை! ஊரிலே கேள்வி பிறக்காதா? ஏன் பெண் மாப்பிள்ளை வீட்டுக்குப் போகவில்லை? என்ன தகராறு சம்பந்திகளுக்கு? என்று கேள்விகள் துவங்கி, கடைசியில் 'மட்டஜாதி'க்காரனுக்குப் பெண்ணைக் கொடுத்து விட்டார்களாம் என்ற உண்மை அம்பலமாகி, ஊர் ஏசுமே, ஏளனம் செய்யுமே! காலத்துக்கும் இருக்குமே அந்தக் கறை!! ஆகவே வெளியே சொல்லவில்லை. உண்மை தெரிந்துவிட்டது என்று மாப்பிள்ளையேகூடத் தெரிந்துகொள்ள விடவில்லை. புன்னகை காட்டியபடி இருந்தனர். மாப்பிள்ளை 'விருந்து' சாப்பிட வந்தவர், மாலையில் உலவப் போனார்! இரவு பிணத்தைத்தான் தூக்கிக்கொண்டு வந்து போட்டனர்; யாருக்கும் தெரியாமல், ஆளைவிட்டு அடித்துக்கொன்று போட்டுவிட்டனர். மகளை விதவையாக்கினர், ஜாதி கெடக் கூடாது, ஜாதி காரணமாக இருந்து வந்த மதிப்பு மடியக் கூடாது என்பதற்காக, கொலையே செய்தனர் குலப் பெருமையைக் காப்பாற்றிக்கொள்ள. பெரிய இடம்! ஒரு துப்பும் கிடைக்கவில்லை! ஒரு புகாரும் எழவில்லை!! இங்கு மங்குமாக, மெள்ள மெள்ளப் பேச்சு கிளம்பிற்று.

## இந்தவாரம் இந்த நாட்டில்...



**அமிர்தசரஸ், மார்ச். 12—** சீக்கிய மாநிலமாகிய 'பஞ்சாபி சுபா' அமைப்பை எதிர்த்து மாநில முழுதும் பலாத்கார நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மாஸ்டர் தாராசிங் கைது செய்யப்பட்டுள்ளார். போலீஸ் தரப்பில் பலத்த சேதம் என்றும் தெரிகிறது. டில்லிக் கலவரத்தையொட்டி பஞ்சாப் இரண்டாகப் பிரியலாம் எனவும் கூறப்படுகிறது.

**திருவாரூர், மார்ச். 13—** உணவுத் தானியங்களைப் பாதுகாத்து வைக்க, திருவாரூரில் இன்னொரு புதிய கிடங்கு கட்டப்படும் என்றார் மாநில முதலமைச்சர்.

**கல்கத்தா, மார்ச். 14—** அண்மையில் நடைபெற்ற கலவரங்கள் பற்றி விசாரிக்க கமிஷன் அமைக்கப்படும் என்று தெரிகிறது.

**லட்சுமணபுரி, மார்ச். 14—** உள்கட்சி எதிர்ப்புத் தொடர்பாக சுதந்திரா கட்சி, தனது வேட்பாளராக, ராஜ்ய சபைக்கு ஆசாரிய கிருபளானியை நிறுத்தாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**வேலூர், மார்ச். 14—** தங்கக் கட்டுப்பாடு காரணமாகப் பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்கள், சங்கம், தங்கள் குறைகள் நீக்கப்படக் கோரி காலவரையற்ற உண்ணு நோன்பிருக்க முடிவெடுத்துள்ளது.

**பாட்னு, மார்ச். 14—** இந்தி மொழிக்கு, அரசியல் சட்ட ஷரத்துப்படி போதிய மதிப்பும், அந்தஸ்த்தும் அளிக்கவில்லை யென்றும் இதுபற்றி சுப்ரீம் நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப் போவதாகவும் மத்திய - இந்தி ஆலோசனைக் குழுத் தலைவர் சேத் கோவிந்ததாஸ் எம். பி. அறிவித்துள்ளார்.

**புதுடில்லி, மார்ச். 15—** கம்யூனிஸ்டு தமிழக எம். பி. உமாநாத் தன் பரோல் காலத்தில் பாராளுமன்றக் கூட்டத்தில் கலந்துகொள்ளக் கூடாதென - தமிழக அரசு விதித்த தடையை, மத்திய அரசு கண்டித்து, வருத்தம் தெரிவித்துக் கொண்டது.

**சென்னை, மார்ச். 15—** சென்னை மாநிலத்தைப் பொறுத்த அளவில், சில மாவட்டங்களில் விளைச்சல் குறைவு என்றாலும், விபரீதமான நிலைமை ஏற்படும் நிலை ஏதும் இல்லை என்றார், அமைச்சர் வெங்கட்ராமன்.

**சென்னை, மார்ச். 16—** உமாநாத் பிரச்னை பற்றி, மாநில சட்ட மன்றத்தில் கழக உறுப்பினர் மதியழகன் உரிமைப் பிரேரணை ஒன்று கொண்டு வந்தார். முதலமைச்சர், சட்ட மன்றத்தை அவமதிக்கும் குற்றம் இழைத்துவிட்டதாகவும், சட்ட மன்ற உரிமையை மீறிவிட்டதாகவும், இது டெல்லி மக்களவையில் கண்டிக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக் காட்டினர்.

**புதுடில்லி, மார்ச். 16—** பட்ஜெட் விவாதத்தின் போது மக்கள் சபையில், இந்திய அரசின் பொருளாதாரக் கொள்கைகள் அனைத்தும் தவறானவை என்று கண்டித்தார் ஆசார்ய கிருபளானி.

---

இருக்கும்! இருக்கும் என்றவர்களும்,

இதை எல்லாம் யார் கண்டனர் என்றவர்களும்,

இல்லாமல் பிறவாது அள்ளாமல் குறையாது என்றவர்களும்

நிரம்ப இருந்தனர்; இந்த அக்ரமம் ஆகுமா என்று கேட்க எவரும் கிளம்பவில்லை. அதுமட்டுமல்ல, தம்பி! ஜாதியைக் கெடுத்துக்கொள்ள எவனய்யா சம்மதிப்பான்? என்று கேட்டவர்களும், "வேறேவழி! ' தீர்த்துக் கட்டுவது தவிர வேறேவழி? என்று 'நியாயம்' பேசியவர்களும், அவன் செய்த அநியாயத்துக்கு அவனை வெட்டி வெட்டியல்லவா போட்டிருக்கவேண்டும் என்று கொதித்துக் கூறியவர்களும், கொலை! கொலை!! என்று பேசுகிறார்களே!! பாம்பை சாகடிக்காமல், படுக்கையில் புரளவிடுவார்களா! ஜாதியைக் கெடுக்க வந்தவனைச் சாகடித்துப் போடாமல், சந்தனத் தாம்பூலம் கொடுப்பார்களா! என்று பேசியவர்களும் இருந்தனர்; பெரிய புள்ளிகளாக! ஊருக்கு நியாயம் வழங்கும் பெரியவர்களாக!!

ஒரு கருப்பு இனத்தவன் நாட்டை ஆள்வது, எஜமானர் இனமான வெள்ளையர் அடிபணிந்து கிடப்பது! இந்த அக்கிரமத்தைச் சகித்துக்கொள்ளச் சொல்லுகிறீர்களா? இது சட்ட சம்மதமானது என்று வாதாடுகிறீர்களா? அரசியல்வேறு! இன இயல்வேறு என்று விளக்கம் கூற முற்படுகிறீர்களா? இந்த வாதமும் விளக்கமும், கோழைததனத்தின் விளைவு, மதிப்பிழந்த நிலையின் விளைவு!! நான் அவ்விதம் இருக்கமாட்டேன்; இந்தக் கருப்பனை வெள்ளை மாளிகையிலிருந்து விரட்டி அடிக்கும் வரையில் நான் ஓயமாட்டேன், நிம்மதியாக உறங்கமாட்டேன் என்று துவக்கமுதலே உறுமிக்கொண்டிருந்தான், நிறவெறியை ஒரு தத்துவம், தர்மம், என்று நம்பிய வெள்ளை இதழாசிரியன் ஒருவன். அவன் போன்றவர்கள், டில்மன் மீது வழக்குத் தொடரப்பட்டதும், களிநடமாடினர். விரட்டிவிடுவதைவிட, வீழ்த்திவிடுவதைவிட, அவன்மீது குற்றம் சுமத்தி, தண்டித்து வெளியே துரத்துவதுதான் அவனுக்கு மட்டுமல்ல, அவனுடைய 'இனத்துக்கே'—இன்று மட்டுமல்ல, என்றென்றும், துடைக்கப்பட முடியாத கறையை ஏற்றி வைக்கும் என்று கருதி மகிழ்ந்தனர் நிறவெறியர்கள்.

இனம், ஜாதி, குலம் ஆகியவை கெட்டுவிடாமல் பாதுகாக்கப்பட வேண்டுமானால், 'இரத்தக்கலப்பு' ஏற்படக்கூடாது; இரத்தக்கலப்பு ஏற்படாமலிருக்கவேண்டுமானால் இரு இனத்தவர்க்குள்ளே கலப்புமணம் அனுமதிக்கப்படக்கூடாது; உடலுறவு ஏற்பட்டுவிடக்கூடாது என்று அழுத்தமான நம்பிக்கை காரணமாக, கட்டுதிட்டமும் சட்டமும் சம்பிரதாயமும் அமைந்துவிடுகின்றன.

நீக்ரோக்கள் தாழ்ந்தவர்கள், அவர்களுடைய 'இரத்தம்' வெள்ளை இனத்தவரின் இரத்தம் போன்றதல்ல; உயர்வானது அல்ல! என்று வாதாடினர்; அக்ரமக்காரர்களும் அடாவடிப் பேர்வழிகளுமல்ல, கற்றவர்களே!! தம்பி! இன்று வெகு எளிதாகக் கூறிவிடுகிறோம், எல்லோர் உடலிலும் ஒரேவிதமான இரத்தம் தான் ஓடுகிறது! இதிலே நீ என்ன உயர்வு? நான் என்ன மட்டம்? என்று கேட்கிறோம், மறுப்பார் இல்லை!! ஆனால், அமெரிக்காவில் இன்றளவும், நீக்ரோ இரத்தம் வேறு வெள்ளையர் இரத்தம் வேறு; இந்த இரண்டும் கலந்திடக்கூடாது என்ற முரட்டுத்தனத்தையும் குருட்டுப்போக்கையும் கட்டிப்பிடித்துக்கொண்டுள்ளவர்கள்

பலப்பலர்! இத்தகைய 'காட்டுமிராண்டி'க் கருத்தைக் கொண்டவர்கள் முன்பு அமெரிக்காவில்; பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் என்ற நிலையிலும், பாதிரிமார்கள் என்ற பட்டத்தைச் சுமந்துகொண்டிருக்கும் நிலையிலும் இருந்தனர்.

ஒருசொட்டு நீக்ரோ இரத்தம் கலந்தாலும்
போதும், நீக்ரோ ஆகிவிடவேண்டியதாகிவிடும்!
ஒருசொட்டு நீக்ரோ இரத்தம் கலந்தால்போதும்
தலைமுடி சுருண்டுவிடும், உதடு பெருத்துவிடும்,
முகம் தட்டையாகிவிடும், அறிவு ஒளி அணைந்து
விடும், மிருக இயல்பு மிகுந்துவிடும், நீக்ரோ
தன்மை தன்னாலே வந்துவிடும்-

1905-ல் தம்பி! இப்படிக் கூறியவர் தாமஸ்டிக்சன் என்பார், கர்த்தருக்குப் பூஜை நடாத்திடும் புனிதப் பணியினில் ஈடுபட்டிருந்தார். இந்தப் போக்கினராக இருந்த பல்லாயிரவரில் இந்த டிக்சன் ஒருவர்.

இவ்விதமான குருட்டுக் கோட்பாடு காரணமாக' வெள்ளை இனத்தவர் தங்கள் 'இரத்தம்' தூய்மையானதாக இருந்தாகவேண்டும் என்பதில் மிகுந்த அக்கறை காட்டிவந்ததுடன், நீக்ரோக்களுக்கு உரிமைகொடுத்தால், மனிதத்தன்மையுடன் நடத்திவந்தால், மெள்ள மெள்ள அந்த இரு இனத்துக்கும் இரத்தக் கலப்பு ஏற்பட்டுவிடும், பிறகு வெள்ளை இனத்தின் உயர்வும் தனித்தன்மையும் நாசமாகிவிடும் என்று கருதினர். இந்த எண்ணத்தின் தொடர்பாக வேறோர் கருத்து கிளம்பிற்று; நீக்ரோக்கள் காமவெறியர்கள்! சிறிதளவு ஏமாந்த நிலையில் இருந்திடின்போதும், வெள்ளை மாதர்களைக் கற்பழித்துவிடுவர்; அவர்களின் விலங்கியல் புக்க வெள்ளை மாதர்கள் பலியாகிப்போவர்! — என்ற எண்ணம்.

நீக்ரோக்களைத்தான் வெள்ளையர் தமது பண்ணைகளிலே மட்டுமல்ல, வீடுகளில, கடைகளில், அலுவலகங்களில், கேளிக்கைக் கூடங்களில் வேலைக்கு வைத்துக்கொண்டிருந்தனர்; கடுமையாக உழைப்பார்கள், அடக்க ஒடுக்கமாக நடந்துகொள்வார்கள், கூலியும் அதிகம் தரத்தேவையில்லை என்ற காரணத்தால்.

வெள்ளையருடன் — மாதருடனும் — பழகியே தீர வேண்டிய நிலை நீக்ரோக்களுக்கு.

ஆனால், வெள்ளையர்களுக்கு சொல்லிவைக்கப்பட்டிருந்ததகவல், கருப்பரிடம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும், அவர்கள் மிருக இயல்பினர்; காமவெறி பிடித்தலைபவர்கள் என்பது.

இதன் பயனாக வீணான சந்தேகத்துக்கு ஆளாகி, சித்திரவதை செய்யப்பட்ட நீக்ரோக்களைப் பற்றிய 'ஏடுகள்' படிப்போரின் உள்ளத்தை உருக்கும்; இரத்தக் கண்ணீர் வடிப்பர்.

நிலைமையை உணர்ந்த நீக்ரோக்கள், இது விஷயத்தில் மிக ஜாக்ரதையாக இருப்பர். வெள்ளை மாதர்களை நெருப்பாகக் கருதுவர்! எந்த நேரத்தில் எந்த விதமான பழி சுமத்தப்பட்டுவிடுமோ என்பது மட்டுமல்ல, எந்தச் சமயத்தில் என்னவிதமான பயங்கரச் சோதனைக்கு ஆளாக்கப்பட்டுவிடுவோமோ என்ற பயமும்கூட.

டக்ளஸ் டில்மன் குடிஅரசுத் தலைவரானதும், இந்த நிலைமையை எடுத்துக்காட்டும நிகழ்ச்சி ஒன்று நடைபெறுகிறது. தம்பி! படித்ததும், நம்மையுமறியாமல் கண்களில் நீர்துளிர்க்கிறது.

## இந்த வாரம் வெளிநாட்டில்...



இலண்டன், மார். 13—இலண்டன் சென்றுள்ள நாவலர் நெடுஞ்செழியனின் பேட்டியொன்று பி. பி. சி.யில் ஒலிபரப்பாகியது.

ஜாகர்தா, மார். 13—இந்தோனேஷிய ராணுவம் அமைதியானமுறையில், சுகர்னோவிடமிருந்து அதிகாரங்களைக் கைப்பற்றிக் கொண்டது. சுபாந்திரியோ சிறையிலிடப்பட்டார் எனத் தெரிகிறது.

நியூயார்க், மார். 14—இந்திய உணவு நெருக்கடி காரணமாக அரசியல் குழப்பம் எதுவும் ஏற்படாது என்று டெலிவிஷன் பேட்டியொன்றில் இந்திராகாந்தி அறிவித்துள்ளார்.

கராச்சி, மார். 14—அயூப்கானின் அழைப்பை ஏற்றுக்கொண்டு, சீன கம்யூனிஸ்ட் அதிபர் லியு-ஷாவோ-சி கிழக்கு பாகிஸ்தான் விஜயம் செய்வார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வாஷிங்டன், மார். 14—இந்தியாவினால் அணுக்குண்டு தயாரிக்க முடியும்; ஆனால் அது சமாதானகாரியங்களுக்கே பயன்படுத்தப்படலாம் என்று பிரதமர் இந்திராகாந்தி அறிவித்ததாக யு. எஸ். - வெளிநாட்டிலாகா கூறியுள்ளது.

பாரீஸ், மார். 15 — நேட்டோ கூட்டிலிருந்து பிரெஞ்சு துண்டித்துக்கொள்ளுமென்று, டிகாலே கூறியதையடுத்து, தனது படைகளை, பிரெஞ்சுப் பிடிப்பில் விடமுடியாது; திரும்பப் பெற்றுக்கொள்ளும் என்று ஜான்சன் அறிவித்துள்ளார்.

சைகோன், மார். 15—யுத்தகாலத்தில் வாணிக முறையில் கொள்ளைலாபம் சம்பாதித்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் வணிகக் களத்திலேயே நிறுத்திவைக்கப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஆக்ரா, மார். 16 — பதவி இழந்த கனா அதிபர் நெக்ருமாவுக்கு எவ்வளவு சொத்துக்கள் இருக்கின்றன என்பதைக் கண்டறிய கமிஷன் ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

ஐ நா., மார். 16—தாஷ்கண்ட் ஒப்பந்தத்தை இந்தியா மீறிவிட்டதாகவும், சியால்கட் பகுதியில் இருநிலைகளைத் தன் வசத்திலே வைத்துள்ளது என்றும் வாய்மொழி மூலம் பாக். புகார் செய்துள்ளதாகத் தெரிகிறது.

டாக்கா, மார். 16—பாகிஸ்தான், தன் நியாயமான உரிமைகளை அடைய, தாஷ்கண்ட் ஒப்பந்தம் தடையாயில்லை என்றும், காஷ்மீர் விவகாரம் தீர்க்கப்படவில்லையாயின் இரு நாடுகளுமே பாதிக்கப்பட நேரும் என்றும் கூறினர் பாக். வெளிவிவகார அமைச்சர் புட்டோ!

வாஷிங்டன், மார்ச், 17— அமெரிக்கா எவ்வளவு விரைவாக உணவு உதவி செய்தபோதிலும், அதனைத் திறம்படப் பயன்படுத்திக் கொள்ளும் திறமை இந்தியாவுக்கில்லை என்று அமெரிக்க செய்தி ஸ்தாபனம் ஒன்று கூறி இருக்கிறது. உதாரணத்துக்கு இது பலோடி என்ற இடத்தில் நடைபெறும் ஊழல், திறமையின்மைகளைச் சுட்டிக் காட்டி இருக்கிறது.

வெள்ளையர்கள் மனதில் நெடுங்காலமாகப் படர்ந்துகிடக்கும் வெறுப்புணர்ச்சி, ஒரு கருப்பர் குடி அரசுத் தலைவர் என்ற உயர் பதவி பெற்றுவிடுவதாலே மட்டும், ஒரே அடியாக மறைந்துவிடுமா.

தாங்கிக்கொள்ளவேண்டி இருக்கிறது.

சகித்துக்கொண்டாக வேண்டும்.

வேறு வழி இல்லையே என்ன செய்வது.

என்று எண்ணிக்கொள்வரேயன்றி, நிறம் எதுவாக இருந்தால் என்ன, குடிஅரசுத் தலைவர் என்ற முறையில், அவர் நம்முடைய அன்புக்கும் மரியாதைக்கும் உரித்தானவராகிறார் என்று எண்ணிக்கொள்வர்? இயல்பு இலேசாகவா மாறிவிடும்!

டக்ளஸ் டில்மன் குடிஅரசுத் தலைவராகி, வெள்ளை மாளிகை சென்ற நாள்; முதல்நாள்.

குடிஅரசுத் தலைவருக்கென்று உள்ள பல அலுவலர்கள், ஒரு கருப்பரின் கீழ் வேலை செய்யவேண்டி இருக்கிறதே என்ற விசாரத்தில் மூழ்கிக்கிடக்கின்றனர். சிலர் நீக்ரோ இனத்தவரான டில்மனுக்கு அதே இனத்தைச் சேர்ந்தவர்கள் பணியாட்களாக இருப்பது முறையாக இருக்கும் என்று கருதி, தமது வேலைகளைராஜிநாமாச் செய்துவிட முடிவு செய்தனர். அவ்விதம் முடிவு செய்தவர்களில் ஒருவர் எட்னு என்ற வெள்ளை மாது; குடிஅரசுத் தலைவருக்கு அந்தரங்கக் காரியதரிசியாக வேலை பார்ப்பவர். இனி நீக்ரோ மாது ஒருவளைத்தான் இந்த வேலையைப் பார்த்துக்கொள்ளச் சொல்லவேண்டும், இன்று மட்டும் குடிஅரசுத் தலைவருக்கு அலுவலக முறைகளைக் கூறிவிட்டால் போதும் என்று எண்ணிக்கொண்டு, ராஜிநாமாக் கடிதத்தைத் தயாராக எடுத்துக்கொண்டு, அன்று அவர் பார்க்க வேண்டிய அலுவல்கள் பற்றிய குறிப்புப் புத்தகத்துடன், குடிஅரசுத் தலைவருடைய தனி அறைக்குச் செல்கிறாள்.

டில்மனுக்கு வணக்கம் கூறிவிட்டு, அவருடைய அன்றைய அலுவல்பற்றிய குறிப்பைத் தந்துவிட்டு, ராஜிநாமாக் கடிதத்தைத் தந்திடத் தயாராகிறாள்.

முக்கியமான ஒரு கடிதம் எழுதப்படவேண்டும் என்ற குறிப்பினைக் காட்டுகிறார் டில்மன். அவர் கூறிக்கொண்டுவர எட்னு சுருக்கெழுத்தில் எழுதவேண்டும். இருவரும் உட்கார்ந்துகொள்வதற்கு வசதியாக அமைந்திருந்த ஒரு சோபாவைக்காட்டுகிறார் டில்மன். உடனே எட்னு, பலகணியை இழுத்து மூடுகிறாள்; அறைக்கதவைச் சாத்தித் தாளிடுகிறாள்.

"என்ன செய்கிறாய் எட்னு?"

"கதவைச் சாத்தித் தாளிடுகிறேன். தாங்கள் கூறப்போகும் தகவல்—கடிதம்—இரகசியமானதாயிற்றே! குடி அரசுத் தலைவர் தமது அந்தரங்கக் காரியதரிசியைக் கொண்டு தயாரிக்கும் கடிதத்தில் உள்ள விஷயம் வெளியே ஒருவருக்கும் தெரியக்கூடாதே..."

"அதனால் கதவைத் தாளிட்டாயா, எட்னு? வேண்டாம். கதவு திறந்தே இருக்கட்டும். ஏன் என்று திகைத்திட வேண்டாம்... என் நிலை அப்படி.....ஒரு சம்பவம் நினைவிலே இருக்கிறது. முன்பு குடிஅரசுத் தலைவராக இருந்த அயிசனவர் ஒரு நீக்ரோவுக்கு முக்கியமான பதவி கொடுத்தார்......அந்த நீக்ரோ தனக்கு உதவியாளராகப் பணிபுரிய, வெகு கஷ்டப்பட்டுத்தான் ஒரு வெள்ளை மாதைப் பெற முடிந்தது.... ....வெள்ளை மாதர்கள் ஒரு கருப்பரிடம் வேலை பார்த்திட விரும்பவில்லை.... பலர்......எப்படியோ ஒரு பெண் கிடைத்தாள் ......அவள் அலுவலகத் தனி அறையில் அமர்ந்து வேலை பார்க்கும்போது, கதவுகளைத் திறந்தே வைத்திருந்தாள். பாவம்! அத்தனை பயம், யார் என்ன சொல்வார்களோ, கருதிக் கொள்வார்களோ என்பதால்... நான் அந்தச் சம்பவத்தை மறக்கவே இல்லை......மறக்கவே முடியாது...எட்னு! கதவுகளைத் திறந்துவை!"

தம்பி! இந்தக் கருத்துப்பட டில்மன் கூறியதும், எட்னுவின் மனம் எப்படி உருகாமலிருந்திருக்க முடியும். நிறம் கருப்பு என்ற ஒரு காரணத்தினால், குடிஅரசுத் தலைவர் பதவிபெற்ற போதிலும், வெள்ளை மாதுடன், தாளிடப்பட்ட தனி அறையில் இருப்பது முறையல்ல; முறையல்ல என்று வெள்ளை உலகம் வெகுண்டெழுந்து கூறும் என்று அல்லவா கருதுகிறார் டில்மன். நிலைமையும், வெள்ளையர் நினைப்பும் அதுபோலத்தானே இருக்கிறது. எத்தனை வேதனை ஏற்பட்டிருக்கும் தனது நிலைமையை எண்ணிப் பார்த்திடும்போது! தத்தளிக்கிறார்! பரிதாபம்! இவருக்குப் பரிவு காட்டி, மனித உள்ளத்தோடு நடந்துகொள்ளவேண்டும். நிறவெறி எல்லோருக்


தமிழ் நாட்டில் தனிச் சிறப்புடன் விளங்குவது

ஜெயா பார்மஸி

ஆயுர்வேத வைத்தியசாலை

H. O. பெரியகுளம்

எங்களது பார்மஸியில் உற்பத்தியாகும்

ஆஸவங்களும் அரிஷ்டங்களும்

விற்பனை செய்ய ஏஜண்டுகள் தேவை.

போதுமான கமிஷன் கொடுக்கப்படும்.

N. B:— எங்கள் பார்மஸி சர்க்காரால் (*Recognised by Central Board of Indigenous Madicine Madras.*) அங்கீகரிக்கப்பட்டது என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறோம்.

திண்டுக்கல் பிராஞ்சில் தொடர்புகொள்க:

உரிமையாளர்: J. M. ராஜன்

ஜெயா பார்மஸி

6, நேருஜிநகர், மதுரைரோடு, திண்டுக்கல்.

PHONE: 348, 348-A, 438

கும் இருந்தே தீரும் என்பதில்லை; வெள்ளையரிலும் மனிதர்கள் இருக்கிறார்கள் என்பதனை மெய்ப்பித்தாகவேண்டும். அஞ்சாதீர் ஐயா! உமது நிறம் கருப்பு, என் நிறம் வெளுப்பு! இருந்தால் என்ன! ஓர் மனிதர்! மேலான பதவியில் அமர்ந்துள்ளவர்! வெள்ளை நிறத்தவர் இந்தப் பதவியில் இருந்தபோது நான் எப்படி நடந்துகொண்டேனோ அதுபோலவே உம்மிடம் நடந்துகொள்வேன்; பேதம் காட்டமாட்டேன்; உமது இதயத்தில் குமுறும் வேதனையை நான் உணருகிறேன்! — என்றெல்லாம் எட்னு கூறவில்லை; பார்வையின் மூலமாகவும் பெருமூச்சின மூலமாகவும் இவ்வளவும் இதற்கு மேலும் விளக்க மாக்கினுள் போலும்!

தலைவர் அவர்களே! கதவுகள் தாளிடப்பட்டே இருக்கட்டும். அதுதான் முறை. எப்போதும் உள்ள முறை.

சரி. எட்னு! நான் பார்க்கவேண்டிய முதல் அலுவல என்ன? குறிப்பு இருக்கிறதல்லவா?

முதல் அலுவல், உமது அலுவலகத்திற்கான பணியாளாகளை, உதவியாளர்களை நியமித்துக் கொள்வது. முன்பு குடிஅரசுத் தலைவராக இருந்தவரிடம் வேலை பார்த்தவர்களையே வேண்டுமானுல் நியமித்துக் கொள்ளலாம்; புதிதாக நியமித்துக் கொள்ளவும் செய்யலாம்...''

அப்படியா! முன்பு இருந்தவர்களையே நியமிக்க விரும்புகிறேன்...எட்னு! முதலாவதாக உன்னிலிருந்து துவக்க விரும்புகிறேன், என்னிடம் பணியாற்றச் சம்மதமா?

நன்றி, வணக்கம். பணியாற்றுகிறேன் மகிழ்ச்சியுடன்.

அப்படியானுல் எட்னு! குடிஅரசுத் தலைவராகியுள்ள நான் முதன் முதலாகப் பிறப்பிக்கும் உத்திரவு, உன்னை வேலைக்கு அமர்த்துவதுதான்...

மெத்தவும் நன்றி, தலைவர் அவர்களே! மிக்க நனறி, உமக்கு எல்லோருமே துணை நிற்பார்கள்; உதவி செய்வார்கள்!

அப்படியா கருதுகிறுய்! எனக்கு அப்படித் தோன்றவில்லை, எடனு!

எல்லோரும் உதவி செய்வர்! உங்கள் வெற்றிக்காகப் பிரார்த்தனை நடத்துவர். ட்ருமனுக்கும் ஜான்சனுக்கும் துணை நின்றது போல உமக்கும் துணைபுரிவாாகள், முனபு போலவே...

முன்பு! இப்போது நிலைமை மாறி இருக்கிறது. அவர்கள் — முன்பு தலைவர்களாக இருநதவர்கள் கருப்பர் அல்லவே......இருக கட்டும்...யாருடைய உதவி கிடைக்காவிட்டாலும், ஆணடவனுடைய உதவி கிடைக்குமலலவா...ஆண்டவன் கருப்பா, வெள்ளை நிறமா என்று நிச்சயிக்கப்படவில்லை அல்லவா!

இந்தக் கருத்துப்பட டில்மன் பேசக் கேட்ட எட்னுவால் அமுத்திவைககப்பட்ட, தாழ்வாக நடததப்பட்டுவந்த ஒரு இனததின் இதயத்தில் கொதித்துக கொண்டிருக்கும் வேதனையை உணர முடிந்தது. டில்மன் எத்தனை நேர்த்தியான நற்குணம் படைததவர் என்பதையும் எப்படி உணராமல் இருந்திருக்க முடியும். ராஜிநாமாக் கடிதத்தைக் கசக்கி எறிந்துவிட்டு, அந்த மனிதனிடம் பணியாற்றி, மனிதத்தன்மையின் மாண்பினை உயர்த்திட உறுதிகொண்டார்.

எட்னு எனும் வெள்ளை மாதிடம் இத்துணைப் பெருங்குணத்துடன் நடந்துகொண்ட டில்மன்மீதுதான் வெள்ளைப் பேரதிகாரிகள், சாலி வாட்சன் என்ற வெள்ளை மாதை கற்பழிக்க முயனருர் என்று குற்றம் சாட்டினர்.

சாலி என்ற அந்த வெள்ளை மாது, வாட்சன் என்ற செனட் உறுபபினரின் மகள்; சீமானின் மகள்; சீமானுக்குவாழ்க்கைப்பட்டு அவனிடமிருந்துவிடுதலைப் பெற்று, புதிய பூஙகாவில் உலவிடத் துடிததுக்கொணடிருந்த உல்லாசி. குறியற்ற குதூகலத்திலும் சாலி குடைந்தாடியபடி இல்லை. பெரிய 'நூடம் தேடிக்கொணடிருந்தாள்.

ஈட்டன் என்ற வெள்ளைப் பேரதிகாரி, குடிஅரசுத் தலைவருக்கு அடுததநிலையினன்! ராஜாஙகக காரிய தரிசி எனற செலவாக்கு மிகக பதவி வகித்து வந்தவன் —மணமானவன்—மனைவியோ மலேமுகடு, கடலோரம் சந்தைச் சதுககம், சல்லாபக்கூடம், ஆகிய இடங்க

## உழைப்பில் வெற்றி!

எருக்கம்பூ தனைப்பறித்துக் கூந்தல் தன்னில்
எவள்வைப்பாள்? இனிக்கின்ற கொம்புத்தேனில்
கருவாடா? பலாச்சுளையா? எதுபொருத்தம்?
காய்ச்சியபால் தனில்சீனி போட்டிடாமல்
உறைக்கின்ற மிளகாய்த்தூள் போடலாமா?
ஒப்பற்ற தமிழகத்தின் ஆட்சிப் பீடம்
நரிகுந்தும் ஆசனமா? இனிமேல் இந்த
நாடாளத் தகுந்தவர்யார்?எடுத்துச் சொல்வோம்

தெருத்திண்ணை தனிலமர்ந்து பேசும் போதும்
தெருவினிலே நடந்தபடி பேசும் போதும்
வருவோரின் செவிகளுக்கு நம்கருத்தை
வழங்கட்டும் நம்முடைய பேச்சு நாக்கு!
வருகின்ற தென்றலுக்கு மணத்தை வாரி
வழங்குகின்ற பூவைப்போல் கொள்கை தன்னை
பெருமையுடன் பிறருக்கு எடுத்துச் சொல்வோம்
பேச்செல்லாம் கொள்கைமணம் கமழ வைப்போம்

நாள்நெருங்க நாள்நெருங்க நெருங்கும் தேர்தல்!
நரித்தனமும் வெறித்தனமும் எதிர்க்கும் நம்மை
ஆள் அம்பு பணவசதி இல்லை என்றே
அயராமல் உழைத்திட்டால் எதிர்ப்பனைத்தும்
தூள்தூளாய்ச் சிதறிவிடும்! மக்கள் பட்ட
துயரெல்லாம் துடைத்திடுவோம்!வாரீர்!குன்றத்
தோள்கொண்ட காளையரே! கழகத் தின்தூண்
தொண்டர்களே!இருக்கிறது உழைப்பில்வெற்றி!

—புலவர் பொன்னிவளவன்.

(14-ம் பக்கம்பார்க்க)

# பாண்டியன் திருமேனி

### பதினொரும் பகுதி

## மணிமுடிக்காக.....

இலங்கை அரசன் பராக்கிமபாகு மதுரை மன்னனின வேண்டுகோளின்படி, இலங்காபுரித் தண்ட நாயகன் தலைமையில் ஒரு பெரும் படையை அனுப்பிவைத்தான். அந்தப் படை பாண்டிய நாட்டிற்கு வருவதற்கு முன்னரே, பராக்கிரம பாண்டியனையும் அவனது மனைவி மக்களையும் குலசேகரன் கொன்று, மதுரை நகரைக்கைப்பற்றி, சிம்மாசனத்தில் அமர்ந்தது மட்டுமனறி, வெற்றிவிழாக் கொண்டாடவும் ஆரம்பித்துவிட்டான்.

அதைக் கேள்விப்பட்ட இலங்காபுரித் தண்ட நாயகம் கடுங்கோபம் கொண்டான். எப்படியும பாண்டிய நாட்டை வெல்லவேணடும், குலசேகரனைக் கொல்லவேண்டும் என்ற முடிவோடு, பாண்டிய மணடலத்தைச் சேர்ந்த இராமேச்சுரத்தின்மீது படையெடுத்துச் சென்று, அதைக கைப்பற்றினன. அடுதது குநதுகாலம் எனற ஊரையும் பிடித்துக் கொண்டான்.

இப்படியாக ஒவ்வொரு ஊராகக் கைப்பற்றியபடி முனனேறிக் கொணடிருந்த சிங்களப் படையை குலசேகரனின் படை சுந்தர பாண்டியன் என்ற தளபதியின தலைமையில் தாக்கியது. சிஙகளப் படையின் எதிரே நிறகமுடியாமல் பாணடியனின் படைகள பின் வாஙகின. அடுத்து பாண்டியராசன் தலைமையில் வந்த படையும், தோல்வியையே கணடது!

வெற்றிக்குமேல் வெற்றி பெற்று இலங்கைப் படை நாளுககுநாள் மதுரையை நெருங்கிக கொணடிருநதது.

படைத் தலைவர் ஆளவந்தார் ஒரு பெரும் படையை நடத்தி வந்தார். அவ்விரு படைகளுககு மிடையே பல ஊர்களில் கடும் போர் நிகழ்ந்தன.

போர்க்களத்தில் படைத் தலைவர் ஆளவந்தார் கொல்லப் பட்டார் என்ற செய்தியைக் கேட்டதும் மன்னன் குலசேகரன் பெருதத அதிர்ச்சியடைந்தான்! அந்த அதிர்ச்சியைவிட சாகடிக்கப்பட்ட பராக்கிரம பாண்டியனின் மகன் வீரபாண்டியன் இன்னமும் உயிரோடு இருக்கிறுன் என்ற செய்தியே, பெரும் அதிர்ச்சியைத் தந்தது!

கொங்கு நாட்டிலிருந்து வரவழைத்திருந்த தன் மாமன் சேனைகளையும், சிதறிககிடந்த பராக்கிரமனின் போர்வீராகளையும், தன் படைகளோடு சேர்த்துக்கொணடு— பெரும் வெற்றியோடு வந்துகொணடிருந்த தண்டநாயகனைத் தாக்க— குலசேகரனே போர்ககளம் புகுந்தான்.

வைகை நதித் தீரத்தில் பெரும் போர் நடந்தது. அந்தப போரிலே சிங்களப் படையே வெற்றி பெற்று, மதுரையைக் கைப்பற்றிக கொணடது!

கொலையுண்ட பராக்கிரம பாண்டியனின் மகன் வீரபாண்டியன், அப்பொழுது மலைநாட்டில் மறைந்து கொணடிருநதான். தோலவியடைந்த குலசேகரன் தலைமறை

## கே.ஜி. இராதாமணாளன்

வாக ஓடிவிட்டதும், தண்டநாயகன் வீரபாணடியனை வரவழைத்து, பாண்டிய நாட்டின் ஆட்சி உரிமையை அவனுககுத் தநதான். வீரபாண்டியன் அரசனானதை, பாண்டிய நாட்டின் பகுத்தறிவுவாதிகள் மட்டுமல்ல, மக்களுமவிருமபவில்லை. பெரும் பெரும் தலைவாகளெல்லாம் அதிருப்தியே காட்டினர்.

அதைக் கண்ட தண்டநாயகன், கீழைமங்கலம், மேலைமங்கலம், தொண்டி, கருந்தங்குடி, திருவேகம்பம் முதலிய ஊர்களை—கண்ட தேவ மழவராயன், மழவச் சக்கரவர்த்தி போன்ற தலைவர்களுக்கு மானியஙகளாக நல்கினான். இவ்வாறு பலரைத் திருப்திப்படுத்தி, அவர்களையெல்லாம் எப்போதும் தன் பக்கம் இழுக்கும்படியாகப் பார்த்துக் கொண்டான், அந்தச் சிங்களப் படைத்தலைவன்.

காடுகளில் ஒளிந்திருந்த குலசேகரன் திரும்பவும் படை திரட்டி வந்து மதுரையைத் தாக்கினான். தண்ட நாயகனால் வெகுமதியாக ஊர்களைப் பெற்ற கண்ட தேவ மழவராயன், மழவச் சக்கரவர்த்தி போன்றவர்கள திடீரென்று குலசேகரனின் பக்கம் சேர்ந்துகொணடனர்!

நாட்டிலிருந்த வீரர்கள் எல்லாம் குலசேகரனையே திரும்பவும் அரசுக் கட்டிலில் அமர்த்தவேண்டும் என்ற ஆர்வத்தில் போரிட்டனர். நாடே குலசேகரனின் பக்கமிருக்கையில், தண்டநாயகனும், வீரபாண்டியனும் என்ன செய்ய இயலும?

சிங்களப் படையும், வீரபாண்டியனும் மதுரையை விட்டு விரட்டியடிக்கப்பட்டனர். திருமபவும் குலசேகரன் மன்னனானான!

அதைக் கண்டு கடுஞ்சினங் கொண்ட தண்டநாயகன், உடனே துணைப்படை அனுப்பும்படி இலங்கைக்கு ஓலை அனுப்பினான். சகத்விசய தண்டநாயகன் எனபான் தலைமையில் ஒரு பெரும் படை அங்கிருந்து புறப்பட்டது.

அந்தச் சிங்களப் படைத் தலைவர்கள் இருவருமாகச் சேர்ந்து குலசேகரனைத தாககித தோற்கடித்து, மீண்டும் வீரபாணடியனை அரியாசனததில அமர்ததினர். அதன பிறகும் குலசேகரன படை திரட்டிக கொணடு, மதுரையைத் தாக்கினான்! தோல்வ! தோலவி! பெருந் தோல்வியே, அவன காணவேணடியதாயிற்று!

சில ஏமாற்றங்களுக்கும், துன்பங்களுக்கும ஆளான குலசேகரன் திருநெலவேலிப் பககமு சென்று ஒளிந்து வாழ்ந்து வரலானான்.

நாட்டின் நலத்தில் அக்கறை கொண்ட பாண்டிய நாட்டின் வாலிபர்கள், குலசேகரனுக்குச் சாதகமான சூழ்நிலையை உண்டாக்க வேலை செய்தனர். வைதீகமதத்தை ஒழிக்க எழுந்த பௌத்த சமண பள்ளிகள், அவனுக்கான ஆதரவைத் திரட்ட ஆரம்பித்தன. மதுரையிலிருந்து அடிக்கடி இரகசியமாக ஆட்கள் வந்து அவனைச் சந்தித்து நிலைமையைக் கூறிவிட்டுச் சென்றனர்.

"இப்பொழுது படை திரட்ட முடியுமானால் மதுரையைச் சுலபமாகக் கைப்பற்றி விடலாமே!" என்று குலசேகரன் எண்ணினான். ஆனால் வாழ்க்கையில் பல இன்னல்களுக்குள்ளாகி, மாறுவேடத்திலே ஏழையைப்போலத் தன் மகன் விக்கிரமனோடும், தோழி சிலம்புத் தாயோடும் வாழ்ந்து வந்த அவனால் எப்படிப் படை திரட்ட முடியும்?

மகன் விக்கிரமனைப் பார்க்கும் போதெல்லாம், அவனுக்கு மனைவி காஞ்சனமாலையின் நினைவு வரும். இதயத்தை வேதனை கசக்க, இரு விழிகளிலும் கண்ணீர் கொட்டபளிக்கும்.

அரண்மனையில் சுகத்தோடு வாழவேண்டிய தன் மகன், இப்படி வெய்யிலிலும் மழையிலும் அடிபட்டு, எழில் மங்கியிருக்கிறானே என்றெண்ணும்போதெல்லாம், துக்கத்தால் அவன் இதயமே பிளந்து விடும்.


மகன் இளைக்கிறானே, வாடுகிறானே என்று நினைத்து கண்ணீர் விடுவான். மகன் பாசம், அவனைச் சாகாமல் சாகடித்துக்கொண்டிருந்தது.

"நான் சீரோடும் சிறப்போடும் விக்ரமனை வளர்ப்பேன் என்ற நம்பிக்கையினால்தானே, காஞ்சனா உயிர்விட்டாள்? தாயில்லாத குழந்தை தவிப்பதை நான் பார்த்துக்கொண்டு, எத்தனை நாட்களுக்குத்தான் இப்படி எங்கோ ஒரு மூலையில் பதுங்கி வாழ்வது? எனக்காக வேண்டாம் — என் இலட்சியத்திற்காக வேண்டாம் — இந்தக் குலக்கொடி கருகாமலிருக்கவாவது, நான் அரசனாக வேண்டாமா?" என்று அவன் அடிக்கடி எண்ண ஆரம்பித்தான்.

யார் உதவியைப்பெற்று, இழந்த நாட்டை மீட்பது என்று இரவும் பகலும் சிந்திக்க ஆரம்பித்தான். கடைசியில், சோழநாட்டு வேந்தன் இரண்டாம் ராசாதிராச சோழனின் உதவியைப் பெறுவது என்ற முடிவிற்கு வந்தான்.

அதன்படியே குலசேகரன் சோழநாடு சென்று, உதவிபுரியுமாறு இராசாதிராச சோழனை வேண்டினான்.

"உமக்கு நான் உதவி செய்கிறேன்! சிங்களப் படைகளை விரட்டியடித்து, உம்மைச் சிம்மாசனத்தில் அமர்த்துகிறேன்! அதற்காகச் சோழ நாட்டிற்குப் பாண்டிய நாடு கீழ்ப்படிந்து நடக்கவேண்டுமென்று நான் சொல்லவில்லை! தீர்வை செலுத்தவேண்டுமென்று நான் கேட்கவில்லை! எனக்காக நீர் ஒன்றும் செய்ய வேண்டாம்—



ஆனால் நான் தொழும் சிவபிரானின் பக்தனாக வேண்டும் நீ! இன்றே சைவத்தில் சேர்ந்து, நெற்றியில் திருநீறு அணியவேண்டும்! பாண்டிய நாட்டில் சைவம் தழைத்தோங்க, வழிவகைகள் செய்யவேண்டும்! அந்தச் சிவப் பணி செவ்வனே நடைபெறுகிறதா என்பதைக் கவனிக்கவும் நீர் சோழநாட்டிற்கு விரோதமாக எந்தக்காரியமும் செய்யாமல்இருக்கிறீரா என்பதைப் பார்க்கவும்-ஒற்றர் நாயகமாக தூசிகேது மதுரையில் இருப்பார். மதத்துறையைத் தவிர, அவசியமேற்பட்டால் அரசியல் விவகாரங்களிலும் ஆலோசனை கூறும் உரிமை அவருக்கு உண்டு! அவருக்கு உதவியாக இராச ராசக் கற்குடி மாராயன், இராச கம்பீர அஞ்சுகோட்டை நாடாழ்வான் ஆகிய இரண்டு தளபதிகள் மதுரையில் இருப்பார்கள்! இவற்றை முழு மனதோடு ஒத்துக்கொண்டால், உமக்கு நான் உதவி செய்யத் தடையில்லை?" என்று இராசாதிராச சோழன் நிபந்தனை விடுத்தான்.

"சைவ மதத்தில் நான் சேருவதா?" என்று குலசேகரன் நீண்ட நேரம் யோசனை செய்தான். அவனது பகுத்தறிவு வேண்டாம் என்றது; ஆனால் பெற்ற மகனின் பாசமோ பணிந்துவிடு என்று கட்டளையிட்டது!

முதலில் அரசனாகிவிடலாம், பிறகு மற்றவற்றை நம் விருப்பம்போல மாற்றிக்கொள்வதற்கான வகையும் வலிமையும் பெறலாம் என்ற துணிச்சலோடு 'சரி அவ்விதமே திருநீறு அணிகிறேன்!' என்று சம்மதம் தெரிவித்தான்.

அங்கே இருந்த ஒரு சிவலிங்கத்தின் முன்பு அடி! பணிந்து நின்றான் அந்தச் சிவலிங்கத்திற்குக் குடையாகப் படமெடுத்தபடி நின்றிருந்த ஐந்து தலை நாகமும், அவனைப் பார்த்து நாக்கு நீட்டிக் கேலிச் சிரிப்புச் சிரித்தது!

"வேற்றானை ஒழிப்பதிலே வேங்கையென சீறியெழுவீர்! விட்டேனா பார் என்று வீரம் பேசுவீர்! விண்ணதிர மண்ணதிர கொக்கரிப்பீர்! கண்களிலே சிவப்பேற்றுவீர் களங் கூட அமைத்துவிடுவீர்! ஆனால் ஏதாவது சபலத்தின் நிழல் இதயத்தின மீது பட்டுவிட்டாலோ —மும்முறிக்கப் பேசி முழக்கமிட்டதையும முற்றும் மறந்துவிட்டு—குப்புறக் கவிழ்ந்து தலைகீழாக விழுந்துவிடுவீர!" என்று விக்கிரமன் பிறந்த அன்றிரவு நன்னன் கூறிய வார்த்தைகள் செவியில் வந்து ரீங்காரம் செய்தன! அவன் உதடுகள் 'நன்னா!" என்று முணுமுணுத்தன! கண்கள் நீரைக் கசிந்தன!

திருச்சிற்றம்பல முடையான் பெருமானம்பி பல்லவராயன் என்பவனின் தலைமையில் சிறந்த படையொன்றை

11-ம் பக்கத் தொடர்ச்சி

ளிலே உலவிக்கொண்டிருந்தாள். இவனைத்தனியனாக்கி விட்டு! அவனைத் தன் 'இனியன்', ஆக்கிக்கொண்டிருந்தாள் சாலி! இந்தச் சல்லாபியைக் கெடுக்க முயற்சித்ததாகக் குற்றச்சாட்டு. அவள் போக்கு அறிந்தவர்களும் அந்தப் புகார் கேட்டுக் கொதித்தனர்; ஆயிரம்தான் இருக்கட்டும், அவள் ஆடிக் கெட்டவள் என்ற பெயரெடுத்தவளாகக் கூட இருக்கட்டும், அவள் வெள்ளை இனம்! இவன்? குடிஅரசுத் தலைவராகிவிட்டதாலேயே வெள்ளை இனத்தவனாகிவிடுவானா! கருப்பன்! நீக்ரோ! ஒரு நீக்ரோ வெள்ளை மாதைக் கற்பழிக்க......! என்ன அக்ரமம்! என்ன அக்ரமம்!! என்று கொதித்தனர்.

டில்மன், மாசற்றவன்; பொறுப்பு மிக்கவன்; வெள்ளை இனத்தவரால் தன் இனத்தவர் மீது ஏற்றப்பட்டிருக்கும் பழிகளை நன்கு அறிந்தவன்! எட்னா எனும் வெள்ளை மாது தன்னுடன் தாளிடப்பட்ட தனி அறையில் இருந்துங்கூட தகாத செயல் என்று 'நாலுபேர்' கூறுவார்களே என்பதை எண்ணி நடுங்கினவன்; நேர்மையாளன்! அவன் மீது இந்தப் பழி! பொதுவாக நீக்ரோக்கள் மீது சுமத்தப்படும் பழி இது! அவர்கள் மனிதர்கள் அல்லவே! மிருகங்கள்! மிருகங்கள்தாக்கத்தானே செய்யும், அடக்கிவைக்காவிட்டால்!

சாலி வாட்சன் தந்திர மிக்க சதி புனைந்தாள்.

டில்மன்—ஒரு கரு நிறத்தான்—குடி அரசுத் தலைவரானது அவளுக்குக் கட்டோடு பிடிக்கவில்லை; ஆயினும் தானாக வலியச் சென்று, 'சிபாரிசு' பிடித்துக் கொண்டு சென்று டில்மனிடம் வேலைக்கு அமர்ந்தாள்; —குடிஅரசுத் தலைவர் அவ்வப்போது உள்நாட்டுப் பிரமுகர்களுக்கும் வெளிநாட்டுத் தலைவர்களுக்கும் நடத்திடும் விருந்து வைபவங்களைக் கவனித்துக்கொள்ளும் காரியதரிசியாக.

பகட்டும் ஆடம்பரமும், பளபளப்பாளர்கள் பலருடன் பழகும் வாய்ப்பும் கிடைக்கும் என்பதற்காக மட்டுமல்ல; குடிஅரசுத் தலைவருடன் நெருங்கிப் பழகவும், அவருடைய 'அந்தரங்கம்' அறியவும் வாய்ப்புக் கிடைக்கும் என்பதால்.

அதிலே என்ன ஆதாயம்? என்று எண்ணுவாய் தம்பி! ஏன் ஆதாயம் இல்லை! கண்டறியும் தகவல்களை உடனுக்குடன தன் 'காதலன்' ஈட்டனுக்குத் தந்திடலாம்; அதனைக்கொண்டு அவன் தன் செல்வாக்கை மேலும் வலுவாக்கிக்கொள்ளலாம்......பிறகு...பிறகு? குடிஅரசுத் தலைவராகவே வந்துவிடலாமே, தக்கசமயம் பார்த்து. அதனால் சாலிக்கு என்ன கிடைக்கும்? என்ன கிடைக்குமா! அவள் சாலி ஈட்டன் ஆகிவிடலாம்! அமெரிக்காவின் முதல் ஆரணங்கு ஆகிடலாம்!!


இத்தனை சதித்திட்டம் உருவாயிற்று அந்த சரசிக்கு.

குடிஅரசுத் தலைவரின் கட்டிலறை! இரவு! ஆடை நெகிழ, மயங்கிய நிலையில், சாலி!

டில்மன் அவளை எழுப்புகிறார்! அவள் சாய்கிறாள்; மேலே; மயக்கத்தில்! அவர் தாங்கிப் பிடித்துக்கொள்கிறார்.

எப்படி நேரிட்டது இந்த நிலை? ஏன் நேரிட்டது என்று கேட்கிறாய்; புரிகிறது தம்பி! உன் ஆவல். சல்லாபச் சீமாட்டியின் சதி நாடகத்தை அவ்வளவு சாமான்யமாகவா எண்ணிக்கொண்டாய். ஒரு வாரம் பொறுத்திரு, முழுவடிவம் கண்டிட.

அண்ணன்,



---

குலசேகரனுக்கு உதவியாகச் சோழன் அனுப்பிவைத்தான்.

தொண்டி, பாசிப்பட்டினம் ஆகிய இடங்களில் கடுமையான போர்கள் நடைபெற்றன. முதலில் சிங்களப்படைகள் வெற்றிபெற்ற போதிலும் கடைசியில் சோழனின் படையால் தோற்கடிக்கப்பட்டன.

குலசேகரனின் வாழ்க்கையில் ஏற்பட்ட, பல தொல்லைகளுக்கும் காரணமாக இருந்த இலங்காபுரித் தண்டநாயகன், சகத்விசய தண்டநாயகன் ஆகிய அந்த இரண்டு படைத்தலைவர்களின் தலைகளை வெட்டி, பாண்டி நாட்டு மக்கள் பார்த்து எள்ளி நகையாடும் விதத்திலே, மதுரைக் கோட்டை வாயிலில் வைக்கப்பட்டன!

அதைக்கேள்விப்பட்ட இலங்கை அரசன் பராக்கிரமபாகு வெகுண்டெழுந்தான். அவமானத்தால் அவன் உடலெல்லாம் பற்றியெரிந்தது. பழிக்குப் பழி வாங்க, குலசேகரனின் தலையை வெட்டிக் கொணர்ந்து தனது கோட்டை வாயிலிலே வைக்க, படைகளைப் பாண்டிய நாட்டிற்கு அனுப்பிவைத்தான்! ஆனால் பாண்டிய நாடு வந்த அப்படைகள் படுதோல்வி அடைந்து இலங்கைக்கு ஓடவேண்டியதாயிற்று! O

நிலா முற்றத்தின் நடுவிலிருந்த மஞ்சத்தில் அமர்ந்து, உதயணன் கதையைக் கேட்ட விக்கிரமன், தாயின் நினைவால் சோர்ந்து படுத்துவிட்டதும்–மன்னன் குலசேகரனின் மனதில் இந்தப் பழைய நிகழ்ச்சிகள் தோன்றி மறைந்தன! நிலவைப் பார்த்தபடி, சென்ற கால சம்பவங்களின் நினைப்பில் ஆழ்ந்திருந்த அவன், வெகு நேரம் கழித்தே அந்த நினைவு வெள்ளத்தை நீந்திக் கரையேறினான்.

"இந்த அரண்மனை வாழ்வைப் பெற நான் பட்ட அல்லல்கள் கொஞ்சமல்ல!" என்று முணுமுணுத்துக்கொண்டே படுத்திருந்த விக்கிரமனின் அருகே சென்றான்.

குழந்தை நன்றாகத் தூங்குகிறான் என்பதைக் கண்டதும் அவன் மஞ்சத்தின்மீது மெள்ள உட்கார்ந்தான்.

அந்தப் பராக்கிமபாகு இன்னும் ஆத்திரம் தணியவில்லையாமே! என்னை எப்படியும் கொன்று, இந்த அரசைக் கைப்பற்றிக் கொள்வதாகச் சபதம் செய்கிறானாமே! சேர நாட்டில் அவன் போர்வீரர்கள் நடமாடுகின்றனர் என்ற செய்தி கிடைத்திருப்பதாக, ஒற்றர்நாயகம் தூமகேது கூறினாரே!" என்ற எண்ணம் எழுந்ததும், உட்கார்ந்தவன் பழையபடியே எழுந்து, உப்பரிகையில் உலவ ஆரம்பித்தான்! அவன் மனதிலே, புயல் வீசிக் கொண்டிருந்தது!



(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தும், உங்களைக் 'குரங்குகள்' என்று ஏசுகிறாரே, கோபமில்லையா, ரோஷமில்லையா என்று கூவிடும் பெரியவரைக் கேட்கிறோம்! காங்கிரஸ் விடுதலைப்போர் நடத்திய நாட்களில் வானரசேனை என்ற பெயருடன் ஒரு படையே திரட்டப்பட்டதே, சிறுவர்களைக்கொண்டு, கவனமிருக்கிறதா? அதற்குத் தலைமையாக நின்றவரே இந்திராகாந்தி என்கிறார்களே, கவனமிருக்கிறதா?

வானரசேனை என்றால் என்ன பொருள்? குரங்குப் படை! இதை எப்படித் தாங்கிக்கொண்டீர்கள். இப்போது துடிதுடிக்கிறீர்களே, பதைபதைக்கிறீர்களே! அப்போது வானரசேனை என்றபெயரை எப்படி ஏற்றுக் கொண்டீர்கள் என்று கேட்கிறோம். அப்போது காமராஜருக்கு ஏன் 'ரோஷம்' பொத்துக்கொண்டு வரவில்லை என்று கேட்கிறோம்.

காமராஜர் பேச்சு வேகத்தில் வெகுதூரம் தாவி விட்டிருக்கிறார்; அவர் கேட்கிறார் தமது தஞ்சைப் பேச்சில், "உங்களை வானரர்—குரங்கு—என்று அந்த ஆச்சாரியார் சொன்னாரே, என்னைச் சொல்லுவாரா? சொன்னால் நான் சும்மா விட்டிருப்பேனா?" என்று.

அசகாய சூரர், என்ன செய்திடுவாரோ நாமறியோம்.

இராமாயணத்தைப் புண்யகதை என்று நம்பிடும் போக்கினர், இராமாயண பாஷையில் நம்மைப்பற்றி மட்டும்தான் பேசியிருக்கிறார்கள் என்று எண்ணிக் கொண்டு இருக்கிறார் என்று தெரிகிறது.

அவர் அறிந்துகொள்வதற்காகவும், அவருடைய குடிபடைகள உணர்ந்துகொள்வதற்காகவும் ஒரு தகவலை—பழைய தகவலைத் தெரிவிக்க விரும்புகிறோம்.

கழகத்தாரை, 'வானரர்' என்றுகூறி, காங்கிரஸ் எதேச்சாதிகாரத்தை அழித்திடக் கிளம்பியிருக்கிறது என்று ஆச்சாரியார் சொன்னதை எடுத்துக்காட்டி, 'ரோஷம்' இல்லையா என்று கேட்கிறாரே 'அகில இந்தியா' அவருக்கு, அதே ராமாயணத்தில் ஆச்சாரியாருக்கு உள்ளதுபோன்ற 'பக்தி' கொண்டுள்ள ஆனந்தவிகடன், 'அனுமார்' என்று பட்டமிட்டு அழைத்திருப்பது நினைவில் இருக்கிறதா என்று கேட்கிறோம்.

தஞ்சைப் பேச்சை அகில இந்தியா மறவாமல், துணையாக்கிக்கொண்டால், வானரம் என்பதற்கு குரங்கு என்று பொருள் கொண்டிடின் 'அனுமார்' என்பதற்குப் பெரியகுரங்கு அல்லது குரங்குத்தலைவன் என்று பொருள் கொண்டாகவேண்டும் — அந்தப் பட்டம் அளிதததது ஆனந்தவிகடன்—காமராஜருக்கு; அவர் 'அகில இந்தியா' ஆக்கப்பட்டபோது,

துளியாவது 'ரோஷம்' கிளம்பிற்றா? கோபம் வந்ததா காமராஜருக்கு?

என்ன துடுக்கு! என்ன திமிர்! என்னைப்போய் 'அனுமார்' என்று கூற! விட்டேனா பார்! சுட்டு விடுவேன சூரணமாக்கிவிடுவேன்! என்றா ஆர்ப்பரித்தார்? ஒன்றையும் காணோம்.

'அகில இந்தியா'வுக்கு அனுமார் நிலையை அளித்த ஆனந்த விகடன் அதிபர் வாசன் காங்கிரசினால் ராஜ்ய சபை உறுப்பினர் ஆக்கப்பட்டார்!

காமராஜர் கடுங்கோபம் காட்டுகிறார்; கடுங்கோபம் கொள்ளச்சொல்கிறார்; ஆச்சாரியார் கழகத்தாரை அக்ரம ஆட்சியை அழித்தொழிக்கக் கிளப்பியுள்ள படை என்ற பொருள்பட, அவர் எப்போதும் பயன்படுத்தும் இராமாயண உவமை கூறியதற்காக.

அதே இராமாயண உவமையைக் கொண்டுதான் ஆனந்தவிகடன், ராமனிடம் எப்படி அனுமான் பக்தியுடன் நடந்துகொண்டு, தன் தோளின்மீது சுமந்து சென்று பணிபுரிந்தாரோ அதுபோலக் காமராஜர் நேருவிடம் பயபக்தி விசுவாசத்துடன் நடந்துகொள்வார் என்று கூறிற்று.

படமே போட்டுக் காட்டிற்று! 'ஆனந்தவிகடன்' வெளியிட்டிருந்த படத்தைத்தான் நாம் வெளியிட்டிருக்கிறோம்.

அட்டைப் படத்தைப் பார்த்திடலாம் 'காமராஜர்' என்ன கோலம! என்ன கோலம்! எவ்வளவு பெரிய உருவம்! எத்தனை வலிவு தெரிகிறது! என்றாலும் எவ்வளவு பணிவு! குழைவு!

தலையிலேமுடி! அடக்கத்தைக் காட்ட வளைந்த நிலையில் உடல்! பக்தியைக் காட்ட, வாயைப் பொத்திக் கொண்டுள்ள நிலையில் கரம்! ஏ! அப்பா! எத்தனை பெரிய வால்!!

இவ்வளவும் இவருக்காக; காமராஜருக்காக! ஆனந்த விகடன் அளித்தது. துளி ரோஷம்? காணோமே கடுகடுக்கிறார் இப்போது; நமக்காக!!

இவர் 'அனுமார்' போன்றவர் என்று ஆனந்த விகடன் படம் போட்டபோது? என்ன திமிர்! என்ன துடுக்கு! குரங்குத் தலைவன் என்றா என்னை ஏசுவது? என்றா கேட்டார்? இல்லை!

இப்போது ஏன் இவ்விதம் பேசுகிறார்? எப்படியாவது கழகத்திற்கும் ஆச்சாரியார் கட்சிக்கும் 'சச்சரவு' மூட்டிவிடலாமா என்ற நப்பாசை!

இலட்சங்கள் பலப்பல குவித்த பிறகும், தைரியம் வரவில்லை; ஆகவேதான், உன்னைக் குரங்கு என்று அவர் சொன்னாரே, நீ ஏன் கோட்டான் என்று அவரைச் சொல்லக்கூடாது என்று தூண்டிவிடும் வேலையிலும் ஈடுபடுகிறார்!!

அவருடைய போக்கு கண்டு நாம் கோபப்படவில்லை; மறுபடியும் ஒருமுறை ஆனந்த விகடன் அளித்த படத்தைப் பார்த்திடத்தான், பயன் படுத்திக் கொண்டோம். நாம் கண்டதனை நாடும் காணட்டும் என்பதற்கே அந்த 'படத்தை'யும் வெளியிட்டிருக்கிறோம்.

நாம் முன்பு குறிப்பிட்ட கண்டனக் கூட்டத்திலே கலந்துகொள்ளக் காமராஜர் துணிவு பெற்று வருவாரானால்—

(1) இராமாயணம் பற்றிய ஆராய்ச்சி குறித்து ஒரு விளக்கத் தீர்மானமும்,

(2) இராமாயணத்தில் உள்ள கருத்தினைக் கொண்டுஆச்சாரியார், கழகத்தாரை, அக்ரம ஆட்சியை ஒழிக்கக் கிளம்பியுள்ள 'வானர சேனை' என்று குறிப்பிட்டது தவறு என்பதற்கான கண்டனத் தீர்மானமும்,

(3) அதே இராமாயணக் கருத்தை ஆதாரமாகக் கொண்டு ஆனந்த விகடன் காமராஜரை, 'அனுமார்' என்று படம் தீட்டியதற்குக் கண்டனத் தீர்மானமும்

நிறைவேற்றிடலாம்; வருவதற்குக் காமராஜர் துணிவு கொள்கிறாரா என்று மறுபடியும் கேட்கிறோம்.




சின்ன காஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், உரிமையாளர் சி. என். ஏ. இளங்கோவனுல் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் சி. என். அண்ணுதுரை.